2021

வருடாந்த அறிக்கை

வாழ்க்கைத் திறன்களை மேம்படுத்தும் முன்னணி அரச நிறுவனம்

தேசிய இளைஞர் படையணி

இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07.
Tel/Fax : +94 112 684 784 / +94 112 688 885
E-mail: info@youthcorps.lk
Web: www.youthcorps.lk

நோக்கு மற்றும் செயற்பணி



எமது நோக்கு

ஆசியப் பிராந்தியத்தில் இளைஞர் யுவதிகளுக்கு
வாழ்க்கைத் திறனை அபிவிருத்தி செய்யும் முன்னணி அரசாங்க நிறுவனமாகத் திகழ்தல்.



எமது செயற்பணி

அறிவு, ஆற்றல் மற்றும் திறன்களைக் கொண்ட ஒழுக்கமுள்ள, சவால்களுக்கு அஞ்சாத வலுவான இளைய சமுதாயத்தின் வாழ்க்கைத் திறன்களை அபிவிருத்தி செய்வதனூடாக அவர்களை கட்டியெழுப்பி தொழில் நுணுக்கத்திற்குத் தேவையான திறன்களின் இடைவெளியை நிரப்புவதனூடாக இலங்கையின் இளைஞர் யுவதிகளின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.



நோக்கங்கள்

- இளைஞர் யுவதிகளின் வாழ்க்கைத் திறன்கள் மற்றும் ஆளுமையை விருத்தி செய்தல்.
- தொழிற் கல்வியை வழங்குதல், தொழில் பயிற்சி மற்றும் தொழில்களில் ஈடுபடுத்தல்.

பிரதான செயற்பாடுகள்

- தேசிய இளைஞர் படையணியின் வாழ்க்கைத்திறன் பாடநெறிக்காக படைப்பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் மற்றும் ஆட்சேர்ப்புச் செய்தல்.
- வாழ்க்கைத்திறன் பாடநெறிகளை உரிய முறையில் திட்டமில் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- தகவல் தொழில்நுட்ப பாடநெறி மற்றும் ஆங்கில மொழிப் பாடநெறியை வழிநடாத்தல்.
- வாழ்க்கைத்திறன் பாடநெறியை நிறைவுசெய்யும் இளைஞர் யுவதிகளை தொழிற் பயிற்சிக்காக அனுப்புதல் மற்றும் தொழில்களில் ஈடுபடுத்தல்.
- உள்ளகப் பயிற்சியாளர்களுக்கு மேலதிகமாக வெளித் தரப்பினர்களினர்களுக்கும் வாழ்க்கைத் திறன் பயிற்சிகளை வழங்குதல்.
- ஹோட்டல் பாடசாலை மற்றும் அதனுடன் தொடர்புடைய பாடநெறிகளை நடாத்துதல்.
- இளைஞர் யுவதிகளின் அழகியல் மற்றும் விளையாட்டுத் திறன்களை விருத்தி செய்வதற்காகப் பங்களிப்புச் செய்தல்.
- நிறுவனத்திலுள்ள பௌதீக வளங்களின் நிர்வாகத்தை உரிய முறையில் மேற்கொள்ளல்.



தவிசாளரின் ஆசிச் செய்தி

2021 ஆம் ஆண்டை தேசிய இளைஞர் படையணி புதிய பரிசோதனைகளைக் கையாண்ட ஒரு ஆண்டாக அழைப்பது பொருத்தமெனக் கருதுகின்றேன். 2021 மார்ச் மாதம் தொடக்கம் முழு உலகத்துடன் சேர்ந்து நமது நாடும் எதிர்கொண்ட கொவிட் 19 தொற்றுநோயின் உச்ச காலகட்டமாக 2021 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுக் காலப் பகுதியை நாம் அடையாளம் காண முடியும். இதன் காரணமாக நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு, தொற்றுநோய் வேகமாகப் பரவும் பகுதிகளை அடையாளம் கண்டு (Lock down) நடமாட்டக் கட்டுப்பாடுகளை விதித்தல் மற்றும் பயிற்சி போன்ற ஒன்றுகூடல் நடவடிக்கைகளுக்கு கட்டுப்பாடுகளை விதித்தல், சுகாதார வழிகாட்டல்களின் பிரகாரம் மக்கள் கூடுவதைத் தடுக்கும் நடவடிக்கைகள் போன்ற காரணங்களினால் 2021 ஆம் ஆண்டில் தேசிய இளைஞர் படையணியின் பயிற்சி நடவடிக்கைகளை திட்டமிடப்பட்ட படி செயற்படுத்த முடியவில்லை.

எனினும், தேசிய இளைஞர் படையணி 2020 ஆம் ஆண்டில் கற்றுக்கொண்ட பாடங்களை கருத்திற்கொண்டு 2021 ஆம் ஆண்டின் சவால்களை சமாளிக்க பின்வரும் மூலோபாயங்களைக் கடைப்பிடித்தது.

அ. இணைய வழியில் பயிற்சியாளர்களுக்கு வாழ்க்கைத்திறன் பயிற்சியின் அடையாளம் காணப்பட்ட பாடங்களை நடத்துதல்.

ஆ. இணைய வழியில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழிப் பாடத்தை கற்பதற்கு பயிற்சியாளர்களுக்கு வசதிகளை வழங்குதல்.

இ. வீட்டிலிருந்தபடியே வாழ்க்கைத் திறன்களை வளர்த்துக்கொள்ள இயலுமான வகையில் பயிற்சியாளர்களின் பங்களிப்புடனும் பங்கேற்புடனும் செயல்படுத்தப்படும் சமூக வலுவூட்டல் திட்டங்களின் தொடரை அறிமுகப்படுத்தல்.

குறிப்பாக, 2021 ஆம் ஆண்டில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலம் கற்பித்தல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனமான இலங்கை சர்வதேச பௌத்த எகடமியுடன் கூட்டிணைக்கப்பட்டு அந்த நிறுவனத்தின் கற்றல் முகாமைத்துவ அமைப்பின் (Learning Management System – SIBA Black Board) மூலம் இந்தப் படையணியின் பயிற்சியாளர்களுக்கு வசதிகள் செய்யப்பட்டன. அதற்கமைய, 1787 பயிற்சியாளர்களுக்கு இணைய வழியில் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு (Free Data) இலவசமாக தரவு Data SIM வழங்கப்பட்டது.

வாழ்க்கைத் திறன் பாடநெறியில் உள்ள சில விடயங்களை இணைய வழியில் (குறிப்பாக நடைமுறைப் பாடப் பகுதிகள்) பயிற்சியாளர்களுக்கு வழங்குவது கடினமாக இருந்த காரணத்தினால் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி அதற்கான மாற்று வழிகளை மேற்கொள்வதற்கு இப்படையணியின் பயிற்சி நிலையங்களின் ஆலோசனைக் குழுவினால் எடுக்கப்பட்ட முயற்சி பாராட்டத்தக்கது.

விசேடமாக பயிற்சி பெறுபவர்களின் வாழ்க்கைத் திறன்களை விருத்திசெய்வதற்கு பின்வரும் திட்டங்களை அவர்களின் வீடுகளுக்கு அண்மையில் செயற்படுத்த இணைய வழியில் பின்வரும் வழிக்காட்டல்கள் வழங்கப்பட்டன. மேலும் கொவிட் தொற்றுநோய் காலத்தில், இளைஞர்கள் மன அழுத்தத்துடனும் வேலை இன்றியும் வீட்டில் இருப்பதை தடுப்பதற்காக அவர்களை செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி அனுபவத்தைப் பெற்று வாழ்க்கையை அனுபவிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.

- விலங்கு நட்பு பராமரிப்பு - பாதையோரங்கள் அல்லது கடைகள் போன்ற பொது இடங்களில் ஆதரவற்ற மற்றும் நோய்வாய்ப்பட்ட விலங்குகளுக்கு உணவு மற்றும் பராமரிப்பு வழங்கும் திட்டம்.
- Y – Green விவசாய வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டம் - பயிற்சி நிலையங்கள் மட்டத்தில் மற்றும் பயிற்சியாளர்களின் வீட்டுத் தோட்டங்களில் அறுவடை நிகழ்ச்சித் திட்டம்.
- "சுசுமட சவியக்" அனர்த்த அபிவிருத்தித் திட்டம் - இயற்கை அல்லது பிற அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தன்னார்வத் தொண்டு மற்றும் ஏற்பாடுகள் மூலம் நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்.
- "உயிருக்கு உயிர்" இரத்த தான நிகழ்ச்சித்திட்டம் - மருத்துவமனையின் தேவைக்கேற்ப சமூகப் பங்கேற்புடன் செயல்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டம்.
- தேசிய நல்லிணக்க இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம் - இனங்களுக்கிடையே நட்புறவு, நல்லிணங்கம் மற்றும் சகோதரத்துவத்தை கட்டியெழுப்புவதற்கான ஒரு கலாச்சார நிகழ்ச்சித்திட்டம்.

இளைய பயிற்சியாளர்களின் அனுபவ எல்லையை விரிவுபடுத்துதல், சமூகத்துடன் பழகும் கலையில் தேர்ச்சியை வழங்குதல், உளப்பாங்கு விருத்தி, மற்றும் தேசிய சேவை பற்றிய உணர்வுகளைத் தூண்டுதல் மற்றும் வீட்டு வசதி தேவைப்படும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பத்திற்கு "செனெஹே பியச" எனும் வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையங்கள் 55 இன் மூலம் ஒரு வீடு என்ற அடிப்படையில் 55 வீடுகளைக் கட்டும் சமூகப் பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்த முடிந்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

வெல்லவாய, நுவரெலியா, கம்பளை இளைஞர் படையணி பயிற்சி நிலையங்கள் மற்றும் தம்புள்ளை ஹோட்டல் பயிற்சிப் பாடசாலை உள்ளிட்ட தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையங்களை கொரோனா நோயாளிகளின் சிகிச்சை மற்றும் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு வழங்கியதானது, தேசிய இளைஞர் படையணியின் மிகுந்த அர்ப்பணிப்பு மற்றும் நிறுவன பலத்தை பிரதிபலிக்கும் ஒரு சந்தர்ப்பமாக காணப்பட்டது. பயிற்சி நிலையங்களை முழு அளவிலான சிகிச்சை மையங்களாக மாற்றுவதற்கு இளைஞர்கள், ஊழியர்கள், பெற்றோர்கள் மற்றும் உள்ளூர்வாசிகள் ஆகியோரால் வழங்கப்பட்ட பங்களிப்பை நான் பெரிதும் பாராட்டுகின்றேன்.

தொற்றுநோய் நிலைமைக்கு முகங்கொடுத்துள்ள நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவமனைகளில் 10,000 கட்டில்களுக்கான தேவை எழுந்த போது அதனை வழங்குவதற்காக செயற்படுத்தப்பட்ட 10 நாட்களில் 10,000 படுக்கைகள் திட்டத்தை 06 நாட்களைக்கொண்ட குறுகிய காலத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு எமக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இது தேசத்தின் முன் நமது கடமை மற்றும் பொறுப்பை நிறைவேற்றிய ஒரு சந்தர்ப்பமாகவே நாம் கருதுகின்றோம்.



எவ்வாறெனினும், கொவிட் 19 தொற்றுநோய்க்கு மத்தியிலும் இளைஞர்களை வாழ்க்கைத் திறன்களால் வளப்படுத்துவதற்கும் அவர்களை நல்ல ஒரு நேசமான குழுவாக மாற்றுவதற்கும் இந்த ஆண்டில் கணிசமான பணியைச் செய்ய முடிந்ததென்பது ஒரு சாதனையாகும். அதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பணிக்குழாத்தினருக்கும் தேசிய இளைஞர் படையணியின் பணிப்பாளர் சபை மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2022 ஆம் ஆண்டில் இலங்கை இளைஞர்களை தொடர்ந்தும் வலுவூட்டி அவர்களை வளமான எதிர்காலத்தை நோக்கி வழிநடாத்துவதற்கு தலைமை தாங்குவதற்கான பலமும் தைரியமும் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

கேர்ணல் தர்ஷன ரத்நாயக்க ஆர்டபிள்யுபி ஆர்எஸ்பி

தவிசாளர்

தேசிய இளைஞர் படையணி

உள்ளடக்கம்

நோக்கு
செயற்பணி
நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள்
தவிசாளரின் ஆசிச் செய்தி
அறிமுகம்

1. தேசிய இளைஞர் படையணி
1.1 இளைஞர் படையணியின் நிர்வாகம்
1.2 இளைஞர் படையணிப் பேரவை

2. நிறுவனக் கட்டமைப்பு
2.1 பணிப்பாளர் / தவிசாளர்
2.1.1 இளைஞர் படையணிப் பணிப்பாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் இயங்கும் பிரிவுகள்
2.1.2 தேசிய இளைஞர் படையணி பயிப்பாளர் சபை
2.2 தேசிய இளைஞர் படையணி வாத்தியக்குழு
2.3 நிறுவன ஒழுங்கமைப்பு

3. மாகாணப் பயிற்சி நிலையங்களின் வலையமைப்பு
3.1 மாகாண அலுவலகங்கள் மற்றும் பயிற்சி நிலையங்கள்
3.2 பயிற்சி நிலையங்களின் இடவிளக்கப்படம்
3.3 பயிற்சி நிலையங்களில் காணப்படும் வசதிகள்

4. முன்னேற்ற மீளாய்வு
4.1 வாழ்க்கைத்திறன் பயிற்சி (இளைஞர் யுவதிகளுக்குப் பயிற்சியளித்தல்)
4.1.1 தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழிப் பாடநெறி
4.1.2 தொழிற் பயிற்களில் ஈடுபடுத்தல்
4.1.3 ஹோட்டல் பயிற்சிப் பாடநெறி
4.2 விசேட வாழ்க்கைத் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
4.3 இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
4.4 துணிகரப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
4.5 மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
4.6 மூலதனக் கருத்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்
4.7 மீண்டுவரும் மற்றும் மூலதன நிகழ்ச்சித்திட்டங்களின் நிதி முன்னேற்றம்
4.7.1 மீண்டுவரும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் நிதி முன்னேற்றம்
4.7.2 மூலதன நிகழ்ச்சித்திட்டங்களின் நிதி முன்னேற்றம்
4.8 நிதி அல்லாத சொத்துக்கள்
4.9 நிர்வாக மற்றும் பணிக்குழாத்தினர் பற்றிய மொத்தக் குறிப்பு
4.10 2021 ஆம் ஆண்டின் வெற்றிகள்
4.11 எதிர்கால இலக்குகள்

5. மனிதவள அபிவிருத்தி
5.1 மனிதவள அபிவிருத்திப் பிரிவினால் நடாத்தப்படும் பல்வேறுபட்ட பயிற்சிகள்
5.2 பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்
5.3 ஏனைய பணிக்குழாத்தினரை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்
5.4 பணிக்குழாத்தினருக்கான வெளிநாட்டுப் பயிற்சிகள்

6. வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு பாடநெறி
7. பயிற்சி பாடநெறியின் இறுதியில் பயிலுநர்கள் கலைந்துசெல்லல்
8. தொழில் பயிற்சிகளில் ஈடுபடுத்தல்
9. விசேட பயிற்சி பாடநெறிகள்
9.1 ஹோட்டல் பயிற்சி பாடநெறி
9.2 தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழி உயர் சான்றிதழ் பாடநெறி

10. இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
10.1 பாடசாலை மாணவத் தலைவர்களை பயிற்றுவித்தல்
10.2 பலநோக்கு அபிவிருத்திச் செயலணி நிகழ்ச்சித்திட்டம்
10.3 போதைப் பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம்
10.4 இளம்பராய சுகாதார மற்றும் பாலியல் ரீதியில் தொற்றும் நோய்கள் பற்றிய நிகழ்ச்சித்திட்டம்
10.5 தொற்றா நோய்கள் பற்றிய நிகழ்ச்சித்திட்டம்
10.6 கட்டுரை, விவாதம் மற்றும் அறிவுக் களஞ்சியப் போட்டிகள்
10.7 அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்
10.8 விளையாட்டு விழாக்கள் (மாகாண)
10.9 Life Ladder இளைஞர் வாழ்வுக்கு சரியான பாதை நிகழ்ச்சித்திட்டம்
10.10 சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
10.11 போதைக்கு அடிமையாகியவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நிகழ்ச்சித்திட்டம்
10.12 இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட சாராம்சம் (துறைகளுக்கு அமைய)

11. சமூக வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்
வருடாந்த நிதி அறிக்கை
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பான தவிசாளரின் பரிந்துரை

01. தேசிய இளைஞர் படையணி

இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய இளைஞர் படையணியானது, இளைஞர் அபிவிருத்தி, தொழிற் பயிற்சி மற்றும் தொழிற்கல்வி ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு 2002 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் நிறுவப்பட்ட ஒரு தேசிய நிறுவனமாகும்.

தற்போது, தேசிய இளைஞர் படையணி நாட்டின் "சுபீட்சத்தின் நோக்கு" எனும் தேசியக் கொள்கை கட்டமைப்புடன் இணைந்து இளைஞர் மேம்பாட்டுக்கான "வாழ்க்கைத்திறன் பயிற்சி" வழங்கும் ஒரே அரசாங்க நிறுவனமாக செயற்படுகின்றது. தற்போதுள்ள கல்வி முறையின் போட்டித் தன்மையுடன் இணைந்த பிற சமூக நிகழ்வுகள் இளைஞர்களின் வாழ்க்கைத் திறன்களை மேம்படுத்துவதை ஊக்கப்படுத்த தவறியுள்ளன. எனவே, இளைஞர்களின் வளமான எதிர்காலத்திற்கான அபிலாஷைகளை அடைந்துகொள்ளும் பொருட்டு இளைஞர்களுக்கு எதிர்கால வேலை உலகத்தையும் வாழ்க்கைத் திறன்களையும் கடத்துவது தேசிய இளைஞர் படையணியின் முதன்மைப் பொறுப்பாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த தேசியப் பணிகளை நிறைவேற்றுவதற்காக இந்தப் படையணி கொழும்பில் ஒரு செயற்பாட்டு தலைமையகத்தையும் ஒன்பது மாகாணங்களை மையமாகக் கொண்ட 09 மாகாண அலுவலகங்களையும் 55 பயிற்சி நிலையங்களின் வலையமைப்பையும் கொண்டுள்ளது.

தேசிய இளைஞர் படையணியின் அடிப்படை பாடநெறி இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதல் மூன்று மாதங்கள் வாழ்க்கை திறன் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது மூன்று மாதக் காலப்பகுதியில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழி பற்றிய நடைமுறை பயிற்சி அளிக்கப்படுகிறது. இங்கு கணினித் தொழில்நுட்பமும் ஆங்கில மொழித் திறனும் இளைஞர்களிடம் கட்டமைக்கப்பட்டுள்ளன.

வாழ்க்கைத் திறன் பாடத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்த இளம் பயிற்சியாளர்கள், தொழில் வழிகாட்டல் முறையின் பிரகாரம் ஒவ்வொரு இளைஞரின் திறன்கள், திறமைகள் மற்றும் ஆர்வங்களின் அடிப்படையில் பொருத்தமான தொழிற்பயிற்சிக்காக அரச அல்லது தனியார் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கு பரிந்துரைக்கப்படுவர். தொழிற்பயிற்சிப் பாடநெறியை தொடருவதற்கு அடிப்படைப் பாடநெறியில் உயர் செயல்திறனை வெளிப்படுத்தும் இளைஞர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை புலமைப் பரிசில் வழங்கப்படும். மேலும், இரண்டு அடிப்படை பாடநெறிகளை நிறைவுசெய்த அனைத்து இளைஞர் துருப்புக்களுக்கு தொழில்முறை பயிற்சியைப் பெறுவதற்கான வழிகாட்டல் மற்றும் வசதிகள் தேசிய இளைஞர் படையணி மூலம் வழங்கப்படுகின்றது.

வாழ்க்கைத் திறன் பயிற்சி வழங்கப்படும் பயிற்சி நிலையங்களுக்கு மேலதிகமாக தேசிய இளைஞர் படையணியின் ஹோட்டல் பயிற்சிப் பாடசாலையை தம்புள்ளை பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ளது. ஹோட்டல் பயிற்சிப் பாடசாலையானது அடிப்படைப் பாடநெறியை நிறைவுசெய்த பயிற்சியாளர்கள் மற்றும் ஹோட்டல் தொழிலுக்கென விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கான பாடநெறிகளை நடத்துகின்றது. ஹோட்டல் பயிற்சிப் பாடநெறியில் பங்குபற்றும் பயிற்சியாளர்களுக்கு ஹோட்டல் பயிற்சி வகுப்புடன் அடிப்படை வாழ்க்கை திறன் பயிற்சியும் வழங்கப்படுகின்றது.

நாட்டின் தேசிய உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்க வேலை உலகில் திறன் மிகவும் இன்றியமையாதது. அதற்கு தனிநபரின் வாழ்க்கை திறன்களை வளர்ப்பது ஒரு கட்டாய காரணியாகும். பொதுக் கல்வி மற்றும் உயர்கல்வியை நிறைவுசெய்து வேலை சந்தையில் நுழையும் அனைவரும் தேசிய இளைஞர் படையணியின் வாழ்க்கைத் திறன் பயிற்சியின் இறுதியில் வேலைவாய்ப்பின் மூலம் விரும்பிய பணியிட செயல்திறனை அடைய முடியும். 2021 ஆம் ஆண்டிலிருந்து தேசிய இளைஞர் படையணியின் எதிர்காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

2021 ஆம் ஆண்டில் கொவிட் 19 தொற்றுநோய் உள்நாட்டிலும் உலக அளவிலும் பாரிய அச்சுறுத்தலாக காணப்பட்டதனால் திட்டமிட்டபடி வாழ்க்கைத் திறன் பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் சிக்கல் காணப்பட்டது. எனினும் அது ஒரு சவாலாகக் கருதப்பட்டு, இணைய வழியிலான கற்றல் கற்பித்தல் முறைகள் மூலம் நிகழ்ச்சிகளை நடத்த முடிந்தது. அன்றைய காலகட்டத்தில் கற்றுக்கொண்ட பாடங்களை இந்நாட்டில் உள்ள இளைஞர்களின் அபிவிருத்திக்கு தீவிரமாக பயன்படுத்த தேசிய இளைஞர் படையணி தயாராக உள்ளது.



1.1 தேசிய இளைஞர் படையணியின் நிர்வாகம்

2002 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட தேசிய இளைஞர் படையணியானது, இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட சபையால் நிர்வகிக்கப்படுகிறது.

1.2 இளைஞர் படையணிச் சபை

இளைஞர் படையணிப் பேரவை இளைஞர் அபிவிருத்தி, வேலைவாய்ப்பு மற்றும் கல்வி ஆகிய துறைகளில் அறிவும் அனுபவமும் உள்ளவர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட தேசிய இளைஞர் படையணிச் சபை அமைச்சரால் நியமிக்கப்படுகின்றது. அவர்களில் ஒருவர் பெண் பிரதிநிதியாக இருத்தல் வேண்டும். மேலும், இளைஞர் படையணிச் சட்டத்தின் இரண்டாவது பிரிவின்படி அமைச்சர் 05 உறுப்பினர்களில் ஒருவரை சபையின் தலைவராக நியமித்தல் வேண்டும். உறுப்பினர்களின் பதவிக்காலம் 03 ஆண்டுகள்.

சபையானது பின்வரும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்த கட்டுப்பட்டுள்ளது.

அ. தேசிய இளைஞர் படையணிக்கான திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல்.

ஆ. வழங்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்ப அமைச்சரால் அங்கீகரிக்கப்படும் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை செற்படுத்துவதை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அறிக்கையிடல்.

இ. இளைஞர் படையணி உறுப்பினர்களின் பயிற்சிகளை மேற்பார்வை செய்தல்.

ஈ. இளைஞர் படையணியின் பணிப்பாளரிடம் வினவி, படையணி உறுப்பினர்களின் பயிற்சி மற்றும் வினைத்திறனுக்கான நிபந்தனைகள் மற்றும் பயிற்சி பெறுபவர் அடைய வேண்டிய தகுதியின் அளவு என்பவற்றைக் குறித்துரைத்தல்.

2021 ஆம் ஆண்டில் தேசிய இளைஞர் படையணிப் பேரவையின் உறுப்பினர்கள்

திரு. சந்திரரத்ன பல்லேகம் **– உறுப்பினர்**
மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் கொள்முதல்) - இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு
கலாநிதி திரு. சாமிந்த அபேசிங்க **– உறுப்பினர்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், களனிப் பல்கலைக்கழகம்)
கலாநிதி திருமதி. ஈ.ஏ.டி. அனுஷா எதிரிசிங்க **– உறுப்பினர்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், களனிப் பல்கலைக்கழகம்)
கலாநிதி எம்.ஏ.எம்.சீ.எஸ். சிரிவர்தன **– உறுப்பினர்**
திரு. அசங்க மைத்ரீரத்ன **– உறுப்பினர்**
திறைசேரியின் பிரதிநிதி
திரு. எஸ்.ஜீ. பதிரகே - உறுப்பினர்
திறைசேரியின் பிரதிநிதி
பணிப்பாளர், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
திரு. எம்.ஆர்.வி.ஆர். மீபுர **– உறுப்பினர்**
மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (பதில் கடமை)
அரச தொழில் முயற்சிகள் திணைக்களம், நிதி அமைச்சு
திரு. டனேஷ் பர்னாட் டயஸ் **– உறுப்பினர்**
மனிதவளத் தலைவர்
இலங்கை கிரிக்கட் சபை

2. நிறுவனக் கட்டமைப்பு

தேசிய இளைஞர் படையணியானது, இளைஞர் படையணி தலைமை அலுவலகம், 09 மாகாண அலுவலகங்கள், 55 பயிற்சி நிலையங்கள், 01 வெளியிட பயிற்சி நிலையம், ஒரு ஹோட்டல் பயிற்சிப் பாடசாலை என்பவற்றைக் கொண்டுள்ளது.

தேசிய இளைஞர் படையணிக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மூலம் பணிப்பாளர் உள்ளிட்ட ஆளணியினரை அங்கீகரித்துள்ளதுடன் அது நிரந்தர ஆளணி மற்றும் ஒப்பந்த ஆளணியொன்றுமாக காணப்படுகிறது.

ஒப்பந்த ஆளணி முப்படைகளில் பணிபுரிந்து சட்டரீதியாக விலகிய அல்லது ஓய்வெடுத்தவர்கர்களைக் கொண்டுள்ளதுடன் இரண்டாம் நிலை மட்டத்தில் படையணியின் பணிகளுக்கு தேசிய மாணவர் படையணி அதிகாரிகளும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

2.1 பணிப்பாளர்/தவிசாளர்

படையணியின் பணிப்பாளர் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்படுகின்றார். படையணியின் நிர்வாகம், பயிற்சி, ஒழுக்கம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றிற்கான முழுப் பொறுப்பையும் அவர் கொண்டுள்ளார்.

அ) சபையின் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

ஆ) பேரவையின் அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கும் அதன் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் அவசியமான தகவல்களை சபைக்கு அறிவித்தல் வேண்டும் என, சட்டத்தின் 08 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.1.1 இளைஞர் படையணி பணிப்பாளரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும் பிரிவுகள்

இளைஞர் படையணி சபையின் செயற்பாடுகளை ஒழுங்கான முறையில் பேணுவதற்கு சட்ட மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகள் இளைஞர் படையணிப் பணிப்பாளரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்குகின்றன.

சபை செயலாளர் / சட்ட அலுவலர்

இளைஞர் படையணிப் பேரவையை ஒன்று திரட்டுதல், அந்தந்த பிரிவினர் சமர்பித்த சபைப் பத்திரங்களை சபையில் சமர்ப்பித்தல், சபையால் அங்கீகரிக்கப்பட்ட பேரவையில் எடுக்கப்பட்ட முடிவுகளை உரிய பிரிவுகள் மற்றும் அதிகாரிகளிடம் சமர்பித்தல், சபையிலிருந்து இருந்து குறிப்புகள் எடுத்தல் போன்ற அனைத்து சட்ட மற்றும் நீதித்துறை. விவகாரங்கள் மற்றும் அந்த விவகாரங்களில் இளைஞர் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்தல் என்பன பணிப்பாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் அவரது ஊழியர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுகின்றது.

உள்ளக கணக்காய்வுப் பிரிவு

இளைஞர் படையணியன் பணிப்பாளரின் நேரடி மேற்பார்வையில், உள்ளக கணக்காய்வு அதிகாரியின் கீழ் பணியாளர்கள் அடங்கிய உள்ளக கணக்காய்வுப் பிரிவு இயங்கி வருகின்றது. இதன் மூலம் இளைஞர் படையணியின் தலைமையகம் மற்றும் அனைத்து பயிற்சி நிலையங்களிலும் கணக்காய்வு வினவல்கள் மேற்கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றன.

2.1.2 பணிப்பாளர் சபை

இளைஞர் படையணியின் தலைமையக பணிப்பாளர், மேலதிகப் பணிப்பளர்கள் 02, உதவிப் பணிப்பாளர்கள் 05 மற்றும் சபை செயலாளர் / சட்ட அலுவலர் உள்ளிட்ட பணியாளர்களைக் கொண்டுள்ளது. மேலும், 2016 ஆம் ஆண்டில் தேசிய இளைஞர் படையணி தலைமை அலுவலகத்திற்கு மேலதிகப் பணிப்பாளர் (திட்டமிடல்) மற்றும் உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) என 02 பதவிகள் தற்காலிக அடிப்படையில் 03 வருட காலத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க, இளைஞர் படையணி தலைமையகத்தின் செயற்பாட்டுப் பிரிவுகள் பின்வருமாறு.

மேலதிகப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி)

நிர்வாகப் பிரிவு – உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)

உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) கீழ் மனிதவளப் பிரிவு, கொள்முதல் பிரிவு, போக்குவரத்துப் பிரிவு, கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பிரிவு ஆகியவை இயங்கி வருகின்றன. இதற்காக நிர்வாக அலுவலர், தொழில்நுட்ப அலுவலர், பிரதம முகாமைத்துவ உதவியாளர் உள்ளிட்ட பணியாளர்கள் தங்கள் சேவைகளை வழங்குகின்றனர். தலைமையகம் மற்றும் பயிற்சி நிலையங்களுக்கு ஆளணியை அனுமதித்துக்கொள்ளல், ஆட்சேர்ப்பு, இடமாற்றம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி, மனிதவள அபிவிருத்தி உள்ளிட்ட பயிற்சி பாடநெறிகளை நடாத்த தேவையான வசதிகளை வழங்குவது இப்பிரிவின் அடிப்படை செயற்பாடுகளாகும்.

நிதிப் பிரிவு – உதவிப் பணிப்பாளர் (நிதி)

உதவிப் பணிப்பாளர் (நிதி) கீழ் கணக்குப் பிரிவு, நிதிப் பிரிவு மற்றும் களஞ்சியப் பிரிவு என்பன இயங்கிவருகின்றன. இதற்காக களஞ்சிய உத்தியோகத்தர் உட்பட ஊழியர்கள் தங்களது சேவைகளை வழங்கி வருகின்றனர். ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், கணக்கீட்டு நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து ஆவணப் பராமரிப்பு மற்றும் வருடாந்த கணக்கு அறிக்கைகளைத் தயாரித்தல், பயிற்சி நிலையங்களுக்கு தேவையான பொருட்களை விநியோகித்தல் உள்ளிட்ட அனைத்து களஞ்சிய நடவடிக்கைகளும் இப்பிரிவின் அடிப்படை செயற்பாடுகளாகும்.

மேலதிகப் பணிப்பாளர்(பயிற்சி மற்றும் அபிவிருத்தி)

பயிற்சிப் பிரிவு – உதவிப் பணிப்பாளர் (பயிற்சி)

உதவிப் பணிப்பாளரின் (பயிற்சி) கீழ், பயிற்சிப் பிரிவு மற்றும் தொழிற் பயிற்சி மற்றும் NVQ பிரிவுகள் இயங்கி வருகின்றன. இதற்காக மேற்பார்வை அதிகாரிகள் உள்ளிட்ட பணியாளர்கள் தங்கள் சேவைகளை வழங்குகின்றனர். பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படும் அடிப்படைப் பயிற்சிப் பாடநெறியின் அனைத்து செயற்பாடுகள், வெளி நிறுவனங்கள் மற்றும் பாடசாலை மாணவத் தலைவர்களுக்கான திறன் விருத்தி மற்றும் தலைமைத்துவ செயலமர்வுகளை வழிநடாத்தல், ஆலோசனை மற்றும் ஆளணிப் பயிற்சி என்பன பயிற்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

அபிவிருத்திப் பிரிவு – உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி)

உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) கீழ் அபிவிருத்திப் பிரிவு இயங்குகின்றது. இதற்காக மேற்பார்வை அதிகாரிகள் உட்பட ஊழியர்கள் தங்கள் சேவைகளை வழங்குகின்றனர். பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சியாளர்களை ஆட்சேர்த்தல், பயிற்சிக் காலத்தில் நடைப்பெறும் கலை விழா, விளையாட்டுப் போட்டிகள், அறிவுக் களஞ்சியப் போட்டிகள், சமூகப் பராமரிப்பு நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், பயிற்சியாளர்கள் கலைந்து செல்லும் அணிவகுப்பு, சான்றிதழ் வழங்குதல், வாழ்க்கைத்திறன் பாடநெறியின் இறுதியில் பயிற்சியாளர்களை தொழிற்பயிற்சிக்காக அனுப்புதல் மற்றும் ஒருங்கிணைப்பு என்பன இப்பிரிவின் அடிப்படை செயற்பாடுகளாகும்.

செயற்படுத்தல் பிரிவு – உதவிப் பணிப்பாளர் (செயற்படுத்தல்)

உதவிப் பணிப்பாளர் (செயற்படுத்தல்) கீழ் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஊடகப் பிரிவு இயங்குகின்றன. இதற்காக மேற்பார்வை அதிகாரிகள் உள்ளிட்ட பணியாளர்கள் தங்களது சேவைகளை வழங்குகின்றனர். இப்பிரிவின் அடிப்படை செயற்பாடுகளாக, தலைமையகம் மற்றும் அனைத்து நிலையங்களையும் ஒரு வலையமைப்பாக இணைத்தல், இளைஞர் படையணியின் இணையத்தளத்தைப் புதுப்பித்து பராமரித்தல், தலைமையகம் மற்றும் பயிற்சி நிலையங்களின் தகவல் தொழில்நுட்பத் தேவைகளைக் கவனித்தல் மற்றும் இளைஞர் படையணியின் அனைத்து ஊடகத் தேவைகளையும் பூர்த்தி செய்வது என்பன இப்பிரிவின் முக்கிய செயற்பாடுகளாக காணப்படுகின்றன.

மேலதிகப் பணிப்பாளர் (திட்டமிடல்) மற்றும் உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)

2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட முன்னோடித் திட்டத்தின் கடமைகளுக்காக 03 வருட காலத்திற்கு மேலதிகப் பணிப்பாளர் (திட்டமிடல்) மற்றும் உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) ஆகிய 02 பதவிகள் தற்காலிக அடிப்படையில் 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அங்கீகரிக்கப்பட்டு அதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் 2016 நவம்பர் மாதத்தில் வெளியிடப்பட்டது. 2017 ஆம் ஆண்டு, இலங்கை கடற்படை அதிகாரி ஒருவர் உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) பதவிக்கு இரண்டாம் நிலை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு, புதிய நிலையங்களின் நிர்மாணப் பணிகள் அவரது மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்டன. 2021 ஆம் ஆண்டு தேசிய கெடட் படையணியின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரால் திட்டமிடல் பணிப்பாளர் பதவியின் கடமைகள் மேற்கொள்ளப்பட்டன.

2.2 தேசிய இளைஞர் படையணியின் வாத்தியக்குழு

தேசிய இளைஞர் படையணியில் அனைத்து நவீன கருவிகள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய மேற்கத்திய இசைக்குழு உள்ளது. அவர்கள் முப்படைகளின் குழுக்களில் உறுப்பினர்களாக இருந்து ஓய்வு பெற்றவர்கள் மற்றும் இளைஞர் படையணியில் பயிற்றுனர் பதவிகளுக்கு இசையமைப்பாளர்களாக பணியமர்த்தப்பட்டவர்களாவர்.

இளைஞர் படையணியின் பயிற்சியாளர்களின் கலைந்து செல்லும் அணிவகுப்பு உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு இசைக்குழு பயன்படுத்தப்படுகிறது மற்றும் தேசிய சுதந்திர தின அணிவகுப்பில் இளைஞர் படையணியின் பயிற்சியாளர்களுடன் இசைக்குழு பங்கேற்கின்றது. அவ்வாறே இந்த வாத்தியக்குழுவிடம் பயிற்சி நிலையங்களின் ஏனைய விரிவுரைக் கடமைகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.




2021 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட ஆளணி

பதவி	சம்பளக் குறியீடு	அனுமதிக்கப்பட்ட ஆளணி				
		நிரந்தர	ஒப்பந்த	தற்காலிக	வெற்றிடம்	மிகை
நிரந்தர						
பணிப்பாளர்	HM 1 - 3	1				
மேலதிகப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி)	HM 1 - 1	1				
மேலதிகப் பணிப்பாளர் (பயிற்சி மற்றும் அபிவிருத்தி)	HM 1 - 1	1				
உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)	MM 1 - 1	1			1	
உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)	MM 1 - 1	1				
உதவிப் பணிப்பாளர் (பயிற்சி)	MM 1 - 1	1				
உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி)	MM 1 - 1	1				
உதவிப் பணிப்பாளர் (செயற்படுத்தல்)	MM 1 - 1	1				
சபை செயலாளர் ஃ சட்ட அலுவலர்	MM 1 - 1	1				
திட்டமிடல் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்	JM 1 - 1			1	1	
உள்ளக கணக்காய்வாளர்	JM 1 - 1	1				
நிர்வாக உத்தியோகத்தர்	JM 1 - 1	1				
களஞ்சியப் பொறுப்பாளர்	JM 1 - 1	1				
தொழில்நுட்ப உத்தியோகத்தர்	JM 1 - 1	1				
நிர்வாக உத்தியோகத்தர் (மனிதவளம்)	JM 1 - 1	1				
கொள்முதல் உத்தியோகத்தர்	JM 1 - 1	1				
போக்குவரத்து உத்தியோகத்தர்	JM 1 - 1	1				
கணக்கீட்டு உத்தியோகத்தர்	JM 1 - 1	1				
அபிவிருத்தி உதவியாளர்	MA 3	160			11	
அழகியல் போதனாசிரியர்	MA 1 - 1	20			3	
முகாமைத்துவ உதவியாளர்	MA 1 - 1	102		1	4	
தமிழ் மொழி பெயர்ப்பாளர்	MA 1 - 1	6			5	
போதனாசிரியர் (தமிழ்)	MA 1 - 1	57			24	
போதனாசிரியர் (தகவல் தொழில்நுட்பம்)	MA 1 - 1	59			5	
போதனாசிரியர் (ஆங்கிலம்)	MA 1 - 1	58			11	
உடற் பயிற்சி / ஒழுக்காற்று போதனாசிரியர்	MA 1 - 1	88			4	
சாரதி	PL 3	7		1		
தூதுவர்	PL 3	1				
மின் தொழில்நுட்பவியளாலர்	PL 3	1				
அலுவலக உதவியாளர்	PL 1	33		1	3	
களஞ்சியப் பொறுப்பாளர்	PL 1	39			3	

பதவி	சம்பளக் குறியீடு	அனுமதிக்கப்பட்ட ஆளணி		
		நிரந்தர	ஒப்பந்த	தற்காலிக
ஒப்பந்த அடிப்படையில்				
உதவிப் பணிப்பாளர் (மாகாண)	MM 1 - 1		9	
நிலைய பொறுப்பதிகாரி	JM 1 - 1		58	
உதவி நிலைய பொறுப்பதிகாரி	JM 1 - 1		59	
போதனாசிரியர் (உடற் பயிற்சி)	MA 1 - 1		171	
மொத்தம்		649	297	4
		950		

2.3 நிறுவன ஒழுங்கமைப்பு



Add. Dir (Admin & Fin.)	Additional Director (Administration & Finance)
Add. Dir (Trg & Dev)	Additional Director (Training & Development)
Ass. Dir (Admin)	Assistant Director (Administration)
Asst. Dir (Fin)	Assistant Director (Finance)
Asst. Dir (Trag)	Assistant Director (Training)
Ass. Dir (Dev)	Assistant Director (Development)
Asst. Dir (Op)	Assistant Director (Operation)
Cou. Sec/Leg. Off.	Council Secretary/Legal Officer

Ass. Dir (Pro.)	Assistant Director (Province)
AO	Administrative Officer
TO	Technical Officer
AO HR	Administrative Officer (HR)
Tra. Off	Transport Officer
Pro. Off	Procurement Officer
Acc. Off.	Account Officer
NA	Network Administrator

OIC	Officer in Charge
Asst. OIC	Assistant Officer in Charge
Pl.Co. Officer	Planning/Coordinating Officer
DA	Development Assistant
MA	Management Assistant
TT	Tamil Translator
IT	Information Technology Instructor
EI	Esthetic Instructor

TI	Tamil Instructor
DI	Drill Instructor
DDI	Drill/Disciplinary Instructor
NYC	National Youth Coordinator
DR	Driver
EL	Electrician
OA	Office Aide
SM	Store Man

03. மாகாண மற்றும் பயிற்சி நிலையங்களின் வலையமைப்பு

தேசிய இளைஞர் படையணி தலைமையகத்தை மையமாகக் கொண்டு தேசிய இளைஞர் படையணிக்குரிய 55 பயிற்சி நிலையங்களில் இளைய மாணவர் படையினருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பயிற்சி நிலையங்கள் மாகாண மட்டத்தில் பரந்துள்ள முறை பின்வருமாறு.

மாகாணம்	பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை
மேல்	05
மத்திய	06
தென்	09
வடமேல்	08
கிழக்கு	07
வடக்கு	03
ஊவா	06
வடமத்திய	05
சப்பிரகமுவ	06
மொத்தம்	55

தேசிய இளைஞர் படையணி தலைமையகத்தின் கீழ் 09 மாகாண அலுவலகங்கள் இயங்கிவருகின்றன. மாகாண அலுவலகங்கள் 09 இன் கீழ் 55 பயிற்சி நிலையங்கள் இயங்கிவருகின்றன.



3.1 மாகாண அலுவலகங்கள் மற்றும் பயிற்சி நிலையங்கள் மாகாண அலுவலகங்கள்

தொ. இல	மாகாண அலுவலகம்	முகவரி	தொலைபேசி இலக்கம்
1	மேல்	மேல் மாகாண பணிப்பாளர் அலுவலகம் இளைஞர் படையணி பயிற்சி நிலையம் வெரல்லவத்தை, யக்கலை.	0701278220
2	மத்திய	மத்திய மாகாண பணிப்பாளர் அலுவலகம் இளைஞர் படையணி பயிற்சி நிலையம் சிறிமல் உயன, ஒகஸ்டாவத்தை, கண்டி	0718457013
3	தென்	தென் மாகாண பணிப்பாளர் அலுவலகம் இளைஞர் படையணி பயிற்சி நிலையம் தென் மாகாணம், போப்பே,காலி	0702587434
4	வடமேல்	வடமேல் மாகாண பணிப்பாளர்அலுவலகம் இளைஞர் படையணி பயிற்சி நிலையம் நீதிமன்ற வீதி, வாரியப்பொல்	0718457013
5	வடமத்திய	வடமத்திய மாகாண பணிப்பாளர்அலுவலகம் இளைஞர் படையணி பயிற்சி நிலையம் மகவலிபெத்த, ஒலுகரந்த, கெக்கிராவை	0718289004 025-9264180
6	ஊவா	ஊவா மாகாண பணிப்பாளர்அலுவலகம் இளைஞர் படையணி பயிற்சி நிலையம் யாலபோவத்தை, வெல்லவாய	0770460352 057-2052393
7	சப்பிரகமுவ	சப்பிரகமுவ மாகாண பணிப்பாளர்அலுவலகம் இளைஞர் படையணி பயிற்சி நிலையம் கங்கொடவத்தை, கேகாலை	0702576555
8	கிழக்கு	கிழக்கு மாகாண பணிப்பாளர்அலுவலகம் இளைஞர் படையணி பயிற்சி நிலையம் ரவுன் வீதி, சத்தாபுர, திருகோணமலை	0712518825
9	வடக்கு	வடக்கு மாகாண பணிப்பாளர்அலுவலகம் இளைஞர் படையணி பயிற்சி நிலையம் இரட்டைப்பெரியகுளம், வவுனியா	0710889436


பயிற்சி நிலையங்கள்

தொ.இல	நிலையம்	மாகாணம்	முகவரி	தொலைபேசி இலக்கம்
1	கட்டுநாயக்க	மேல்	தம்மாலோக்க மாவத்தை, வலானை, கட்டுநாயக்க	0112-260 020
2	அத்தனகல்லை		வத்துபிட்டிவல, அத்தனகல்லை, நிட்டம்புவ	033-228 2232
3	திவுலபிட்டிய		வல்பிட்ட, திவுலபிட்டிய	033-227 2875
4	புலத்சிங்கள		தேசிய இளைஞர் படையணி நிலையம் புலத்சிங்கள	034-228 2322
5	யக்கலை		வெரல்லவத்தை, யக்கலை	033-223 3534

6	கம்பளை	மத்திய	நாவலப்பிட்டி வீதி, குடாமாகே, கம்பளை	081-207 8177
7	நாஉல		அரங்கலை, நாஉல	066-224 6204
8	நுவரெலியா		மீபிலிமான, அம்பேவலை, நுவரெலியா	052-353 6332
9	வலப்பனை		ஹரஸ்பெத்த, வலப்பனை	052-205 0010
10	செங்கடகல		சிறிமல் உயன, ஒகஸ்வத்தை, கண்டி	081-238 9134
11	யட்டிநுவர		யட்டிநுவர, பிலபிட்டிய, முருதலாவை	081-241 0026
12	காலி	தென்	வெகுணுகொட, போப்பே, காலி	091-223 3182
13	நெலுவ		பியசேன கமகே கட்டிடத் தொகுதி, அம்பலேகெதர, நெலுவ	091-309 8911
14	அக்குரஸ்ஸ		மாரம்பஇ அக்குரஸ்ஸ	041-313 1216
15	வீரகெட்டிய		நைகல, ஹகுருஎல, வீரகெட்டிய	047-225 7143
16	சூரியவெவ		மத்திய கல்லூரி வீதி, சூரியவெவ	047-228 8169
17	அக்மீமன		குருந்துவத்தை, அக்மீமன	091-312 1736
18	திக்வெல்லை		ஊருகமுவ, திக்வெல்லை	041-225 5055
19	லுனுகம்வெஹர		லுனுகம்வெஹர, தலாவை	047-2239292
20	வீரவில		தேசிய இளைஞர் படையணி நிலையம் வீரவில	047-3128444
21	குலியாபிட்டிய	வடமேல்	தெகம்மெத்த, வெவகம, குலியாபிட்டிய	
22	வாரியபொல		நீதிமன்ற வீதி, வாரியபொல	037-228 3680
23	மாவத்தகம		டொன்வோர் தோட்டம், மாவத்தகம	037-2268375
24	பண்டுவஸ்நுவர		நுகவெல சந்தி, பண்டுவஸ்நுவர	037-2298668
25	தொடம்கஸ்லந்த		அலகொலமட, மதுராகொட, தொடம்கஸ்லந்த	037-2291803
26	நாத்தண்டிய		சாகரகம, நாத்தண்டிய	037-225 2655
27	வென்னப்புவ		ரனவிரு கமலசிறி மாவத்தை, போலான, வைக்கால	032-2050815
28	அலவ்வை		வலிகமுவ, அலவ்வை	031- 227 7199
29	கெக்கிராவை	வடமத்திய	மகவலிபெத்த, ஒலுகரந்த, கெக்கிராவை	037-2067885
30	கலாவெவ		கல்நேவ, பூல்நேவ,கலாவெவ	025 -226 3297
31	அநுராதபுரம்		மாபாலடிகுளம், அநுராதபுரம்	025 -226 9946
32	மெதிரிகிரிய		கடுலுகம, மெதிரிகிரிய	025- 385 2809
33	கலென்பிந்துனுவெவ		யக்கல, கலென்பிந்துனுவெவ	027- 205 0477

34	பண்டாரவளை	ஊவா	பிந்துனுவெவ, பண்டாரவளை	025- 225 8355
35	மகியங்கனை		மாபாகட, மகியங்கனை	057-222 2214
36	தணமல்விலை		போதாகம, தணமல்விலை	055-225 7118
37	மொணராகலை		வெலியாய, மொணராகலை	047-322 0529
38	வெல்லவாய		யாலபோவத்தை, வெல்லவாய	055-205 5741
39	சியம்பலாண்டுவ		19 ஆம் மைல்கல், பொத்துவில் வீதி, சியம்பலாண்டுவ	055-2274157
40	நிவித்திகல	சப்பிரகமுவ	அம்பலந்தெனி, வட்டபொத்த வீதி, நிவித்திகல	0703538292
41	கலிகமுவ		அசிதெனிய, கலிகமுவ நகரம், கலிகமுவ	045-227 9970
42	எம்பிலிபிட்டிய		'கம்உதா' இடம, யோதகம, எம்பிலிபிட்டிய	035-228 2993
43	கேகாலை		கங்கொடவத்தை, கேகாலை	047-226 2399
44	பலாங்கொடை		பட்டுகம்மன, பலாங்கொடை	035- 222 3260
45	தெஹிஓவிட்ட		கனன்கம, தெஹிஓவிட்ட	045- 312 9898
46	அம்பாறை	கிழக்கு	கல்வி நிர்வாக அலுவலகம், உஹன வீதி, அம்பாறை	036-226 7671
47	சேருவாவிலை		சேருவாவிலை, அலிஒலுவ, சேருநுவர	063-222 4810
48	கோமரண்கடவலை		வில்பானகுளம், கோமரண்கடவலை	026-454 9439
49	குச்சவெளி		சலபை ஆறு, குச்சவெளி	026-454 9428
50	திருகோணமலை		ரவுன் வீதி, சத்தாபுர, திருகோணமலை	026-222 8709
51	தெஹிஅத்தகண்டிய		லிஹினியாகம, தமனவெல, தெஹிஅத்தகண்டிய	026-454 9432
52	வாழைச்சேனை		18 ஆம் கட்டை, காந்திநகர், கல்குடா, வாழைச்சேனை	027-205 6723
53	முல்லைத்தீவு	வடக்கு	வட்டுவாய்க்கால், முல்லைத்தீவு	065-312 1085
54	மன்னார்		தலைமன்னார் வீதி, மன்னார்	021 -229 0428
55	வவுனியா		இரட்டைப் பெரியகுளம், வவுனியா	023- 225 1917
				024- 205 4558

3.2 பயிற்சி நிலையங்களின் அமைவிடங்கள்



3.3 பயிற்சி நிலையங்களில் காணப்படும் வசதிகள்

பூமியில் காணப்படும் இடவசதிக்கேற்ப ஒரு முறைக்கு பயிலுநர்கள் 150 - 250 க்கு இடைப்பட்ட எண்ணிக்கையைக் கொண்டவர்களுக்கு பயிற்சியை வழங்க முடியுமான வகையில் பயிற்சி நிலையங்கள் கட்டியெழுப்பப்பட்டுள்ளதோடு, அதிகமான பயிற்சி நிலையங்களில் பின்வரும் வசதிகள் காணப்படுகின்றன.

- அலுவலகம்
- பயிலுநர்கள் 40 – 50 பேருக்கு பயிற்சிபெற முடியுமான வகுப்பறைகள் 4 அல்லது 5
- விரிவுரை மண்டபம்
- 25 கணினிகளைக் கொண்ட கணினி ஆய்வுகூடம்
- உணவகம்
- சமையலறை
- தூர இடத்திலுள்ள பயிலுநர்களுக்கு தங்குமிட வசதிகள்
- உடைமாற்றும் அறைகள்
- ஆண் பெண் கழிவறைகள்
- விளையாட்டு மைதானம்
- இணையத்தள மற்றும் தொலைபேசி வசதிகள்

பயிற்சி நிலையங்களுக்கு பின்வரும் பணிக்குழாத்தினர் இணைக்கப்பட்டுள்ளனர்

- நிலையப் பொறுப்பதிகாரி - 01
- உதவி நிலையப் பொறுப்பதிகாரி - 01
- அபிவிருத்தி உதவியாளர் (தொழில் வழிகாட்டல் போதனாசிரியர்) - 02
- அபிவிருத்தி உதவியாளர் (ஆளுமை விருத்தி போதனாசிரியர்) - 01
- அபிவிருத்தி உதவியாளர் (அழகியல் போதனாசிரியர்) - 01
- போதனாசிரியர் (தகவல் தொழில்நுட்பம்) - 01
- போதனாசிரியர் (ஆங்கிலம்) - 01
- போதனாசிரியர்(தமிழ்) - 01
- போதனாசிரியர்(படைப் பயிற்சி) - 03
- முகாமைத்துவ உதவியாளர் - 01
- உடற் பயிற்றி / ஒழுக்க போதனாசிரியர் - 02
- களஞ்சியப் பொறுப்பாளர் - 01


4. முன்னேற்ற மீளாய்வு - 2021

2021 ஆம் ஆண்டில் இளைஞர் மற்றும் தொழில் பயிற்சியை நோக்காகக் கொண்டு பல நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்ததோடு அவற்றின் முன்னேற்ற மீளாய்வு பின்வருமாறு.

4.1 வாழ்க்கைத்திறன் பயிற்சி (இளைஞர் யுவதிகளைப் பயிற்றுவித்தல்)

செயற்பாடு	இலக்கிடப்பட்ட		முன்னேற்றம்				முன்னேற்றம் சதவீதமாக	எதிர்கால இலக்கு
	நிகழ்ச்சித்திட்டங்கள்	பங்கேற்பு	நிகழ்ச்சித்-திட்டங்கள்	பங்கேற்பு				
				பெண்கள்	ஆண்கள்	மொத்தம்		
	110	10,000	110	4111	3935	8046	நிகழ்ச்சித்திட்டங்கள் 100% பங்கேற்பு 80%	2022 ஆம் ஆண்டில் 03 பாடநெறிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததோடு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட இலங்கை பௌத்த பல்கலைக்கழகத்தினால் த.தொ. மற்றும் ஆங்கில மொழி சான்றிதழ் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஆறு மாத கால பாட நெறியாக செயல்படுத்தப்படும் வாழ்க்கை திறன் பாடநெறிக்கு ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் வாழ்க்கை திறன் பாடநெறி இறுதியில் பயனுள்ளார்கள் தொழில் பயிற்சிக்கு ஈடுபடுத்தப்படுவர்



4.1.1 தகவல் தொழிநுட்பம் மற்றும் ஆங்கில மொழி பற்றிய பாடநெறி

பாடநெறி	சித்தியடைந்த எண்ணிக்கை	சித்தியடைந்த %
Level 01		
தகவல் தொழில்நுட்பம் சான்றிதழ் பாடநெறி	1339	95
ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி	1314	96
Level 02		
தகவல் தொழில்நுட்பம் உயர் சான்றிதழ் பாடநெறி	1213	92
ஆங்கில மொழி உயர் சான்றிதழ் பாடநெறி	1191	90

தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழிப் பாடநெறியைப் பயின்ற பயிற்சியாளர்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உயர் சான்றிதல் வழங்கப்படும்.

இணைய வழியில் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு தேவையான இலவச தரவு (Free Data) 1787 பயிற்சியாளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. இணைய வழியில் கற்பித்தல் நடவடிக்கைகள் SIBA – NYC Black Board எனும் Learning Management System மூலம் மேற்கொள்ளப்பட்டன.

2021 ஆம் ஆண்டின் அடிப்படைப் பயிற்சிப் பாடநெறியின் ஆரம்பக் குழுவுக்கு 2329 இளைஞர்கள் பதிவு செய்யப்பட்டனர். எனினும் 2021.06.05 ஆம் திகதியளவில் பாடநெறியுடன் இணைக்கப்பட்ட பயிற்சியாளர்களின் எண்ணிக்கை 1787 ஆகும். கோவிட்-19 தொற்று நோய் சூழ்நிலையில், சுகாதார வழிகாட்டுதல்களின்படி பயிற்சி நிலையங்களில் பொதுவான பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத காரணத்தினால் இணைய வழியில் அடிப்படை பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க, இலங்கை சர்வதேச பௌத்த அகாடமியுடன் (SIBA) இணைந்து நடத்தப்படும் ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பாடநெறியில் ஆளுமை விருத்தி மற்றும் தொழில் வழிகாட்டல் ஆகியவையும் இணைய வழியில் நடாத்தப்பட்டன. அதற்கமைவாக, தொற்றுநோய் நிலைமையை சவாலாகக் கொண்டு பயிற்சி நடவடிக்கைகளை நிறுத்தாமல் முன்னெடுப்பதன் மூலம் இளைஞர் படையணியுடன் இணைந்துள்ள இளைஞர் சமூகத்தினருக்கு பயனுள்ள பயிற்சி வாய்ப்பை ஏற்பாடு செய்ய முடிந்தது.

இந்த இணையவழிப் பயிற்சி அமர்வுகளில் பயிற்சி பெற்றவர்களும் ஆர்வத்துடன் பங்கேற்றனர். பயிற்சியாளர்களுக்கு சிம் அட்டைகளை வழங்குவதன் மூலம் பயிற்சி வகுப்புகளில் பங்கேற்க தேவையான இணைய வசதிகளை பெற்றுக்கொடுத்து பயிற்சி வசதிகளை வழங்கவும் முடிந்தது. ஆதற்கிணங்க, அந்தப் பயிற்சியாளர்களுக்கு இலவச னுயவய சிம் அட்டைகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. பயிற்சி நிலையங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் சில பயிற்சியாளர்கள் வேலைவாய்ப்பு மற்றும் பல்வேறு தனிப்பட்ட காரணங்களால் பாடநெறிகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

இரண்டாம் கட்டத்தில் (Level 02) பாடநெறியின் கற்பித்தல் உள்ளடக்கம் பல நடைமுறைச் செயல்பாடுகளைக் கொண்டுள்ளது. எனவே, நடமாட்டக் கட்டுப்பாடு நிலவிய காலத்தில் கணினி ஆய்வகங்களில் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. மேலும், பயிற்சியாளர்கள் தங்கள் தனிப்பட்ட தொலைபேசிகள், கணினிகள் மற்றும் பல்வேறு இணைய அணுகல் முறைகளை பாடங்களைப் படிப்பதற்கும் பயிற்சிகளுக்காகவும் பயன்படுத்தினர். அங்கு பயிற்சியாளர்கள் எதிர்கொண்ட பல்வேறுபட்ட தொழில்நுட்ப பிரச்சனைகளால் பரீட்சைக்கு வருபவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது.

4.1.2 தொழிற் பயிற்சிகளில் ஈடுபடுத்தல்

இலக்கிடப்பட்ட (அலகுகள்)	தொழிற் பயிற்சிகளுக்கு அனுப்புதல்	முன்னேற்றம் %
பயிற்சியாளர்கள் 3300	716	22

4.1.3 ஹோட்டல் பாடசாலை பாடநெறி

இலக்கிடப்பட்ட (அலகுகள்)	பதிவு செய்யப்பட்ட பயிற்சியாளர்கள்	முன்னேற்றம் %	தொழில்களில் ஈடுபடுத்தல்	
			தொழில்களில் ஈடுபடுத்திய எண்ணிக்கை	%
400 பயிற்சியாளர்கள்	86	22	37	9.3



4.2 விசேட வாழ்க்கைத்திறன் மற்றும் தலைமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

செயற்பாடு	இலக்கிடப்பட்ட		முன்னேற்றம்		முன்னேற்றம் சதவீதமாக %
	நிகழ்ச்சித்திட்டங்கள்	பங்கேற்பு	நிகழ்ச்சித்திட்டங்கள்	பங்கேற்பு	
பாடசாலை மாணவத் தலைவர்களுக்குப் பயிற்சியளித்தல்	110	2500	9	548	நிகழ்ச்சித்திட்டங்கள் - 8% பங்கேற்பு - 22% (கொவிட் தொற்றுநோய் பரவிய காரணத்தினால் பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்ட காரணத்தினால் இந்த நிகழச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை)
பல்நோக்கு அபிவிருத்தி செயலணி நிகழ்ச்சித்திட்டம்	2	39612	2 (கட்டம் II)	33084	நிகழ்ச்சித்திட்டங்கள் - 100% பங்கேற்பு - 84%

4.3 இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

செயற்பாடு	இலக்கிடப்பட்ட		முன்னேற்றம்		முன்னேற்றம் சதவீதமாக %
	நிகழ்ச்சித்திட்டங்கள்	பங்கேற்பு	நிகழ்ச்சித்திட்டங்கள்	பங்கேற்பு	
போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம்	110	10,000	39	3520	நிகழ்ச்சித்திட்டங்கள் - 35% பங்கேற்பு- 35%
பாலியல் நோய்களை (STD) தடுக்கும் நிகழ்ச்சித்திட்டம்	110	10,000	39	1222	நிகழ்ச்சித்திட்டங்கள் - 35% பங்கேற்பு - 12%
தொற்றா நோய்களை (NCD) தடுக்கும் நிகழ்ச்சித்திட்டம்	110	10,000	36	1143	நிகழ்ச்சித்திட்டங்கள் - 33% பங்கேற்பு - 11%
சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	110	10,000	35	1040	நிகழ்ச்சித்திட்டங்கள் - 32% பங்கேற்பு - 10%
கட்டுரைப் போட்டி (நிலைய மட்டத்தில்)	110	10,000	55	3762	நிகழ்ச்சித்திட்டங்கள் - 50% பங்கேற்பு - 38%
விவாதப் போட்டிகள் (நிலைய மட்டத்தில்)	110	10,000	55	3625	நிகழ்ச்சித்திட்டங்கள் - 50% பங்கேற்பு - 36%

அறிவுக்களஞ்சியம் (நிலைய மட்டத்தில்)	110	10,000	55	3701	நிகழ்ச்சித்திட்டங்கள் - 50% பங்கேற்பு - 37%
அனர்த்த முகாமைத்துவம் நிகழ்ச்சித்திட்டம் (மூன்று நாள்)	110	10,000	18	1514	நிகழ்ச்சித்திட்டங்கள் - 16% பங்கேற்பு - 15%
விளையாட்டு விழாக்கள் (நிலைய மட்டத்தில்)	110	10,000	51	6700	நிகழ்ச்சித்திட்டங்கள் - 46% பங்கேற்பு - 67%
இளைஞர் சமுதாயத்திற்கு சரியான பாதை	03	70	01	41	நிகழ்ச்சித்திட்டங்கள் - 33% பங்கேற்பு - 59%
கலை விழா (தேசிய மட்டம் - பௌருஷ பிமான I	01	1150	01	1115	நிகழ்ச்சித்திட்டங்கள் - 100% பங்கேற்பு - 97%
கலைந்து செல்லும் வைபவங்கள் (தேசிய / நிலைய மட்டத்தில்) (குறிப்பு 01)	01	3000	54	3966	நிகழ்ச்சித்திட்டங்கள் - 100% பங்கேற்பு - 132%
போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நிகழ்ச்சித்திட்டம் (NDDCB உடன் இணைந்த நிகழ்ச்சித்திட்டம்)	01	18	01	05	நிகழ்ச்சித்திட்டங்கள் - 100% பங்கேற்பு - 28%
தொழிற் பயிற்சி அதிகாரசபை (VTA) மென் திறன்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	01	7000	01	10,825	நிகழ்ச்சித்திட்டங்கள் - 100% பங்கேற்பு - 155%

குறிப்பு 01 : 2021 ஆம் ஆண்டில் தேசிய மட்டத்திலான கலைந்து செல்லும் விழாவொன்றை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் நாட்டில் நிலவிய கொவிட் 10 தொற்றுநோய் நிலைமைக் காரணமாக கலைந்து செல்லும் விழாக்களை பயிற்சி நிலையங்கள் மட்டத்தில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டது.

இந்தப் பாடநெறிக் காலப்பகுதியில் நிலவிய கொவிட் 19 தொற்று நோய் காரணமாக சில பயிற்சி நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டன. இணைய வழியில் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சமூக இடைவெளியைப் பேண வேண்டியிருந்த காரணத்தினால் பயிற்சியாளர்கள் ஒன்றுகூடல் நடைப்பெறவில்லை. எனவே, அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் பௌதீக ரீதியில் எதிர்ப்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தை அடைய முடியவில்லை.

4.4 துணிகரப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (Adventure Base Training)

நிகழ்ச்சித்திட்டம்	வெற்றிகள் மற்றும் அடையப்பெற்ற இலக்குகள்	எதிர்கால இலக்குகள்	சவால்கள்
துணிகரப் பயிற்சி	ஒரு பயிற்சி நிலையத்தில் அதிகூடிய திறமையைக் காட்டும் பயிற்சியாளர்கள் 10 பேர் வீதம் துணிகரப் பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டனர். 2021.12.31 ஆம் திகதியளவில் பயிற்சி நிலையங்கள் மட்டத்தில் பயிலுனர்கள் 510 பேர் துணிகரப் பயிற்சியில் பங்கேற்றுள்ளனர். வெளிப் பயிலுனர்கள் 55 பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.	பயிற்சி நிலையங்களின் அனைத்து பயிலுனர்களுக்கும் துணிகரப் பயிற்சியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெளித் தரப்பினர்களுக்கும் துணிகரப் பயிற்சியை வழங்குதல்.	கொவிட்ட 19 தொற்றுநோய் காரணமாக விதிக்கப்பட்ட புதிய சுகாதார வழிமுறைகள் காரணமாக பயிற்சி நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டன.

4.5 மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

நிகழ்ச்சித்திட்டம்	வெற்றிகள் மற்றும் அடையப்பெற்ற இலக்குகள்	எதிர்கால இலக்குகள்	சவால்கள்
பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சியளித்தல் (TOT)	2021 ஆம் ஆண்டின் வருடாந்த பயிற்சித் திட்டத்திற்கு அமைய பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் 2500 மனித நாட்கள் திட்டமிடப்பட்டிருந்தன. அவ்வாறே, நிலவிய கொவிட்ட தொற்றுநோய் காரணமாக இணைய வழியில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. அதன் போது மனித நாட்கள் 6198 நிறைவுசெய்யப்பட்டன. பங்கேற்பு 4885 ஆகும்.	2022 வருடத்தின் வருடாந்த பயிற்சி திட்டத்திற்கு அமைய பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் மனித நாட்கள் 2500 திட்டமிடப்பட்டுள்ளது.	கொவிட்ட 19 தொற்றுநோய் காரணமாக விதிக்கப்பட்ட புதிய சுகாதார வழிமுறைகள் காரணமாக பயிற்சி நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டன.
நிர்வாக ஆளணிக்கான பயிற்சி	நிறுவன உத்தியோகத்தர்கள் 35 பேருக்கு பயிற்சி அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	மொத்த ஆளணியின் செயலாற்றுகை மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக ஆளணிப் பயிற்சி அமர்வுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.	

4.6 மூலதன கருத்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்

மொத்த பௌதீக முன்னேற்றம

விபரம்	பௌதீக முன்னேற்றம் (%)
புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்	98
மூலதனக் கருத்திட்டங்கள் (கையகப்படுத்தல்)	92
திறன் அபிவிருத்தி : பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல் (TOT) / ஆளணிப் பயிற்சி)	90
கொள்முதல்	95
மொத்தம்	94

மூலதனக் கருத்திட்டங்கள் (புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்)

செலவுத் தலைப்பு	மாகாணம்	பயிற்சி நிலையம்	நிகழ்ச்சித்திட்டம்	பௌதீக முன்னேற்றம் (%)	பௌதீக முன்னேற்றம் விரிவாக
2001					
1	மேல் மாகாணம்	கட்டுநாயக்க	ரேன்ஜர்களின் உடை மாற்றும் இரண்டு அறைகளின் மேல் பகுதியை கம்பி வேலியிட்டு மறைத்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
2	வடமேல் மாகாணம்	வாரியப்பொல	முன்பகுதி வேலிக்குப் பதிலாக வலையிடல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
3			ஏஞ அறையை வலையிடல் மற்றும் கதவு பொருத்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
4			புதிய கழிவறை மற்றும் வொஸ் பேசின் பொருத்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
5			சமையலறைக்கு பின்னால் மற்றும் இடது புறத்தில் புதிய பாதுகாப்பு வேலி அமைத்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
6		பண்டுவஸ்நுவர	பயிற்சி நிலையத்தின் பின்புறம் மற்றும் இடது புறம் பாதுகாப்பு வேலியை புதிதாக நிர்மாணத்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
7		வென்னப்புவ	பயிற்சி நிலையத்தைச் சுற்றி பாதுகாப்பு வேலி பழுதுபார்ப்பு	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
8		குலியாபிட்டிய	வகுப்பறைக்கு சீமெந்து மதில் அமைத்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
9		மாவத்தகம	இளைஞர் யுவதிகளின் விடுதியினி கதவு யன்னல் பழுதுபார்ப்பு	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.

10	வட மத்திய மாகாணம்	கெக்கிராவை	மின்சாரத் தொகுதியை பழுதுபார்த்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
11		கலென்பிந்துனு வெவ	காவல் அறை நிர்மாணித்தல்	100%	விலைப் பட்டியல் நிதிப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது
12	தென் மாகாணம்	வீரகெட்டிய	பெண்கள் விடுதியில் யன்னல் கிரில் மற்றும் கதவு பூட்டுக்கள் மற்றும் சிவிலின் அமைத்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
13		அக்மீமன	கழிவறை தொகுதியை நிர்மாணித்தல் ஃ பிரதான கட்டிடத்தின் கூரை மற்றும் பீவீசீ குழாய் பழுதுபார்ப்பு	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
14	மத்திய மாகாணம்	நாஉல வெளியிடம்	பிரதான நுழைவாயில் தொடக்கம் உத்தியோகத்தர் விடுதி வரையிலான வீதிக்கு இன்டர்லொக் கல் பதித்தல்	75%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
15			விடுதிக் கட்டிடத்தின் கீழ் மாடி (Balance Work)	65%	நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
16			பாதுகாப்பு மதில் அமைத்தல் (கால்வாய் வீதிக்கு அண்மையில்) நீளம் 270 அடி	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
17		தம்புள்ளை ஹோட்டல் பாடசாலை	மின் பிறப்பாக்கி இயந்திரத்தை வைப்பதற்கு மறைவொன்றை அமைத்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
18		குச்சவெளி	பிரதான கேட்டை அமைத்தல்		
19		தெஹிஅத்தகண்டிய	அலுவலகத்தின் மற்றும் கணினி ஆய்வுகூடத்தின் சிவிலினை அைத்தல்	100%	விலைப் பட்டியல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறைபாடு உள்ளது
20		தணமல்விலை	சமையல் அறையின் சின்க் தொகுதியை அமைத்தல் மற்றும் 02 அடி விட்டத்திற்கு கொன்கிறீட் பிலேட் அமைத்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
21		மொணராகலை	பாதுகாப்பு கேட்டை அமைத்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
22		மகியங்கனை	05 குழாய்களைக் கொண்ட இடமொன்றை அமைத்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
23		கேகாலை	பயிற்சி நிலையத்தை சுற்றி பாதுகாப்பு வேலியை புனரமைத்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
24			குழாய் கினறு அமைத்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
25		எம்பிலிபிட்டிய	கழிவறைத் தொகுதியை நிர்மாணித்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
26		மன்னார்	கூரையை பழுதுபார்த்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.

27	வடக்கு மாகாணம்	தலைமையகம்	கொடிக் கம்பம் அமைத்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
28			தவிசாளரின் உத்தியோகபூர்வ அறைக்கு அண்மையிலுள்ள குளியல் அறையை பழுதுபார்த்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
29			களஞ்சிய கட்டிடத்தின் அலுமினியம் கதவுகளைப் பொருத்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
30			பின்னால் உள்ள மதிலை 07 அடி உயரத்திற்கு நிர்மாணித்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
31		அக்மீமன	பயிற்சி நிலையத்தில் இரண்டு கழிவறைகளை நிர்மாணித்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
32	தென் மாகாணம	கேகாலை	உத்தியோகத்தர் ஓய்வறையின் சிவிலினை அமைத்தல்	100%	விலைப் பட்டியல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறைபாடு உள்ளது.
33			மாகாண அலுவலகத்தை பழுதுபார்த்தல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
34	மத்திய மாகாணம	யட்டிநுவர	மத்திய மாகாண அலுவலகத்தின் உணவகம் மற்றும் பிரதான களஞ்சியத்திற்கு நுழையும் வீதியை கொன்கிரீட்ட இடுதல்	100%	விலைப் பட்டியல் தீர்க்கப்பட்டுள்ளது.
35	கிழக்கு மாகாணம்	அம்பாறை	பயிற்சி நிழலயத்தில் மின் விழக்கு தொகுதியைப் பொருத்துதல்	100%	விலைப் பட்டியல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறைபாடு உள்ளது
மொத்தம்				100%	

மூலதனக் கருத்திட்டங்கள் (கையகப்படுத்தல்)

செலவினத் தலைப்பு 2104	கருத்திட்டம்/நிகழ்ச்சித்திட்டம்	பௌதீக முன்னேற்றம் (%)	பௌதீக முன்னேற்றம் விரிவாக
1	அலவ்வை பயிற்சி நிலையத்தை நிர்மாணித்தல்	100%	ஐந்து கட்டிடங்களைக் கொண்டது. அனைத்தும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
2	வாழைச்சேனை பயிற்சி நிலையத்தை நிர்மாணித்தல்	100%	ஐந்து கட்டிடங்களைக் கொண்டது. அனைத்தும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
3	கோமரன்கடவல பயிற்சி நிலையத்தை நிர்மாணித்தல்	95%	ஐந்து கட்டிடங்களைக் கொண்டது. அனைத்தும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
4	திருகோணமலை பயிற்சி நிலையத்தை நிர்மாணித்தல்	100%	ஐந்து கட்டிடங்களைக் கொண்டது. அனைத்தும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
5	சூரியவெவ பயிற்சி நிலையத்தை நிர்மாணித்தல்	100%	களஞ்சியக் கட்டிடத்தின் அத்திவாரம் இட்டு நிலம் கொன்கிரீட் இடப்பட்டுள்ளது. சமையலறையின் கூரைகள் மற்றும் தூண்களை இட்டு கொன்கிரீட் செய்யப்பட்டுள்ளன. கேட்போர் கூடத்தின் அஸ்திவாரம் இடப்பட்டு கொன்கிறீட் இடப்பட்டுள்ளது. வகுப்பறை கட்டிடத்தின் துருவங்கள் கொன்கிரீட் செய்யப்பட்டு கூரை சீட் இடப்பட்டுள்ளது. விடுதிக் கட்டிடத்தின் அத்திவாரம் போடப்பட்டு கொன்கிரீட் இடப்பட்டுள்ளது.
6	சிலாபம் பயிற்சி நிலையத்தை நிர்மாணித்தல்	40%	வகுப்பறைகள், கணினி ஆய்வக கட்டிடம் மற்றும் நிர்வாக கட்டிடம் ஆகியவற்றின் துருவங்கள் சுவர்களில் பிணைக்கப்பட்டுள்ளன. சமையலறை மற்றும் களஞ்சியக் கட்டிடத்தின் தளம் கொன்கிரீட் மற்றும் தூண்கள் இடப்பட்டுள்ளன.
7	தம்புள்ளை பயிற்சி நிலையத்தை நிர்மாணித்தல்	70%	ஐந்து கட்டிடங்கள் உள்ளன. அங்கு வகுப்பறை, கணினி ஆய்வக கட்டிடம் மற்றும் நிர்வாக கட்டிடத்தின் தூன் இடப்பட்டு கூரையுடன் பிணைக்கப்பட்டுள்ளன. பெண்கள் மற்றும் ஆண் ஆடை மாற்றும் கட்டிடடத்தில் தூ ண்கள் இட்டு சுவர்கள் கட்டப்பட்டுள்ளன. கொன்கிரீட் தளம் போடப்பட உள்ளது. கேட்போர்கூடத்தின் தூண்கள் மட்டும் இடப்பட்டுள்ளன. களஞ்சியசாலை மற்றும் சமையலறையின் சுவர்கள் கட்டப்பட்டுள்ளன, மின் பொருத்திகள் தயாரிக்கப்பட்டு ஜன்னல்கள் அமைக்கப்பட்டுள்ளன.
8	வீரவில தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையத்திற்கு புதிய நீர் இணைப்பு பெற்றுக்கொள்ளல்	100%	இந்த வேலை நிறைவடைந்துள்ளது
9	லுனுகம்வெஹர தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையத்திற்கு புதிய நீர் இணைப்பு பெற்றுக்கொள்ளல்	80%	இறுதிக் கட்டத்தில் உள்ளது
10	லுனுகம்வெஹர தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையத்திற்கு புதிய நீர் இணைப்பு பெற்றுக்கொள்ளும் போது வீதியை தோண்டுவதற்கான கட்டணம்		
11	சூரியவெவ (Balance Work & Toilet Block)	80%	இறுதிக் கட்டத்தில் உள்ளது

12	தலைமையகத்தின் முன்புற மதிலை நிர்மாணித்தல்	100%	நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன
13	பதிவேட்டறையை புனரமைத்தல்	100%	நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன
14	மொணராகலை கட்டம் 04	100%	நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன
15	நாஉலை கட்டம் 02 – விடுதிக் கட்டிடம்	60%	கூரை வரை சுவர் கட்டப்பட்டுள்ளது“
16	கட்டுநாயக்க கழிவறைத் தொகுதி – மேலதிக வேலை நு2	100%	நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன
17	பண்டாரவளை கழிவறைத் தொகுதி – மேலதிக வேலை நு1	100%	நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன
18	மனிதவளப் பிரிவு மற்றும் பாதுகாப்பு கூடங்களை மேம்படுத்தல்	100%	நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன
19	கதிர்காமம் (Balance Work)	100%	நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன
20	நிவித்ததிகல (Balance Work)	100%	நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன
21	திக்வெல்லை (Balance Work)	100%	நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன
22	ஆலோசனை சேவைக் கட்டணங்கள் கொடுப்பனவு	100%	நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன
	மொத்தம்	90%	

கொள்முதல்

தொ. இல	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	மதிப்பீட்டுச் செலவு	நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம்	
			பௌதீக முன்னேற்றம	நிதி முன்னேற்றம
மூலதனச் செலவினம்				
01	தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள	24.39	75%	10%
02	ஆதனம் பொறிகள் மற்றும் உபகரணங்கள்	57.01	75%	38%
03	கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்புகள்	205.07	92%	74%
04	ஆதனம் பொறிகள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்ப்பு	1.00	75%	0%
05	கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்புகள் பழுது-பார்ப்பு	30.80	98%	59%
06	போக்குவரத்து பழுதுபார்ப்பு	1.00	90%	62%
07	மென்பொருள் அபிவிருத்தி	3.00	50%	13%
நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் எனது அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் உள்ளடங்காது. நான் அது தொடர்பில் எவ்வித அத்தாட்சிப்படுத்தலையோ அல்லது அபிப்பிராயத்தையோ சமர்ப்பிக்கவில்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் எனது கணக்காய்வுக்கு அமைய எனது பொறுப்பாவது மேலே அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடனோ அல்லது கணக்காய்வின் போதோ அல்லது வேறு முறையிலோ பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கு அமைய எண்ணிக்கை அளவில் வித்தியாசம் உண்டா என்பது தொடர்பில் பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

தேசிய இளைஞர் படையணியின் 2021 வருடாந்த அறிக்கையை வாசிக்கும் போது அதன் தகவல்கள் எண்ணிக்கை ரீதியில் பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளதென நான் தீர்மானிக்குமிடத்து அந்த விடயங்களை நான் அறிக்கையிடல் வேண்டும். மேலும் சரிசெய்யப்படாத தவறுகள் இருப்பின் அவை அரசியலமைப்பின் 154(6) உறுப்புரை பிரகாரம் உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிப்பதற்காக மற்றும் நியாயமாக முன்வைப்பதற்காக மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிகழுவதற்கு இடம்பாடுள்ள எண்ணிக்கை ரீதியாக பிழையான கூற்றுக்கள் இன்றி நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் பொருட்டு தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கின்ற போது படையணியினால் தொடர்ச்சியாக பேண முடியுமான ஆற்றலை தீர்மானிக்கும் பொறுப்பு முகாமைத்துவத்துக்கு உரியதாகும். முகாமைத்துவம் படையணியை கலைப்பதற்கு உத்தேசிக்குமாயின் அல்லது வேறு மாற்றீடு இல்லாத விடத்து செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் அன்றி தொடர்ந்தேர்ச்சியான இருப்புக்கு ஏற்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

படையணியின் நிதி அறிக்கையிடல் செயன்முறைப் பற்றிய பொறுப்பு, நிர்வகிக்கும் தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உட்பிரிவின் பிரகாரம் படையணியின் வருடாந்த மற்றும் தற்கால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு ஏற்ற வகையில் தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான உரிய புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மொத்தமாக நிதிக் கூற்றுக்களின் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் எண்ணிக்கை ரீதியான பொய்யான கூற்றுக்கள் அல்ல என்ற சாதாரண உறுதிப்பாட்டை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். சாதாரண உறுதிப்பாடு உயர் மட்டத்திலான சான்றிதழ் என்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும் போது அது எப்போதும் எண்ணிக்கை ரீதியான பிறழ் கூற்றுக்களை இனம்காணக்கூடிய உறுதிப்பாடாக அமையாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியான அல்லது கூட்டாக தாக்கம் செலுத்தும் எண்ணிக்கை ரீதியான பிறழ்கூற்றுக்கள் நிகழ முடியுமாயினும் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயனர்களினால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தாக்கத்தை செலுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில் ரீதியான முடிவு மற்றும் தொழில் ரீதியான தீர்ப்புடன் மற்றும் தொழில் ரீதியான சந்தேகத்துடன் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் நிகழ முடியுமான எண்ணிக்கை ரீதியான பிழையான கூற்றுக்களின் ஆபத்தை இனம்காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக நிகழக்கூடிய ஆபத்தை தவிர்ப்பதற்கு போதியளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். எண்ணிக்கை ரீதியான பொய்யான கூற்றுக்களினால் ஏற்படக்கூடிய தாக்கங்களை விட மோசடியினால் நிகழும் தாக்கம் பாரியது. கூட்டுச்சதி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தட்டிக்கழித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை கைவிடுதல் மோசடி நிகழுவதற்கு காரணமாகும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக சபையின் உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வு பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் உள்ளக நிர்வாகத்தின் பயனுறுதி தொடர்பில் அபிப்பிராயம் தெரிவிக்க இங்கு முன்வரவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் தகைமையை மதிப்பிடல்.

- நிகழ்வுகள் அல்லது நிலமைகள் காரணமாக சபையின் தொடர்ச்சியான இருப்பு பற்றிய எண்ணிக்கை ரீதியான எதிர்பாராத விளைவுகள் உள்ளனவா என்பது தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டுக்கான நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு பற்றிய அடிப்படையைப் பயன்படுத்துவதன் ஏற்புடமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவு எதிர்பாரா நிகழ்வு உள்ளதாக நான் முடிவு செய்யுமிடத்து நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பிலான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தை செலுத்த வேண்டுமென்பதோடு, அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாத விடத்து எனது அபிப்பிராயத்தை திருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறெனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலமைகளின் மீது தொடர்ச்சியான இருப்பு முடிவடைய முடியும்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக் கூற்றுக்களில் வெளியிடல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டதோடு, அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதென மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக நிர்வாக

பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வகிக்கும் தரப்பினர்களை அறிவூட்டுதல்.

2. வேறு சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெறப்பட்டுள்ளதோடு, எனது விசாரணை மூலம் தெரியவரும் விடயம் யாதெனில், படையணி உரிய முறையில் நிதி அறிக்கைகளை பேணிவந்துள்ளது என்பதாகும். அதனை இங்கு அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய படையணியின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இணைந்து செல்கின்றது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (�ை) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, இந்த அறிக்கையில் 1.2 (அ) மற்றும் (ஈ) பந்திகளின் அவதானிப்புக்கள் தவிர்ந்த கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட சிபாரிசுகள் தவிர்ந்த கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட சிபாரிசுகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சியங்களின் மீது மற்றும் எண்ணிக்கை ரீதியான விடயங்களுக்கு வரையறுத்து பின்வரும் பிரகடனங்களை செய்யுமளவுக்கு எந்தவொரு விடயமும் எனது அவதானிப்புக்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய சபையின் ஆளுநர் சபையின் எவரேனும் உறுப்பினர் ஒருவருக்கு சபையுடன் இணைந்து ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சாதாரண வியாபார நிலைமைக்கு அப்பால் தொடர்பு உள்ளதென,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த ஏதேனும் ஏற்புடைய எழுதப்பட்ட சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுநர் சபையினால் வழங்கப்படும் வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைவாக அன்றி செயற்பட்டுள்ளாரென,

சட்டங்கள் / கட்டளைகளுக்கான தொடர்பு	அவதானிப்புக்கள்
(அ) 2003 ஜூன் 02 ஆம் திகதிய இல. ஈபிடி/12 எனும் அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை	
(i) 5.1 பந்தி	இணைந்த திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டியிருப்பினும் படையணியினால் இணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை
(ii) 6.5.1 பந்தி	நிதி ஆண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருப்பினும் படையணியினால் உரிய திகதிக்கு 09 மாதங்கள் கழிந்து நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
(ஆ) 1978 டிசம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை	படையணியால் 2021 டிசம்பர் 31 இல் கிரயம் ரூபா 2,378 ஆன சொத்து, பொறி மற்றும் உபகரணங்களுக்காக் நிலையான சொத்துக்கள் பதிவேடு பராமரிக்கப்படவில்லை.
(இ) 2022 இன் 21 ஆம் இலக்க இளைஞர் படையணிச் சட்டத்தின் 2(4) பிரிவு	தொழில்முறை பயிற்சி, இளைஞர் மேம்பாடு மற்றும் நிறுவலுக்கு 3 குழுக்கள் நியமிக்கப்பட வேண்டியதுடன் சபையினால் அதன் அதிகாரங்களை அந்தக் குழுக்களுக்கு பகிர்ந்தளிக்க முடியுமென்பது குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தேசிய இளைஞர் படையணியால் படையணி ஆரம்பிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டிலிருந்து அவ்வாறு செய்யப்படவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென.

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த சபையின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் ஏற்புடைய காலப் பிரிவில் ஏற்புடைய சட்ட விதிகளுக்கு அமைய பெறுகை மேற்கொண்டு பயன்படுத்தவில்லையென,

3 வேறு விடயங்கள்

(அ) நிதிக்கூற்றுக்களில் ஏனைய பெற வேண்டியவைகளில் குறிப்பிடப்பட்டிருந்த படையணியின் வெளியார் நிறுவனமொன்றான சிறு வியாபார அபிவிருத்தி பிரிவினால் 2015 முதல் 2021 வரை பயன்படுத்தப்பட்ட மின்சாரம் மற்றும் நீர் பயன்பாட்டிற்கான மற்றும் வீதவரிக்காக அறவிட வேண்டியிருந்த ரூபா 14 மில்லியன் மற்றும் வெண்ணப்புவ பயிற்சி நிலையம் நிர்மாணிப்பதற்காக நிர்மான நிறுவனத்திற்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 2 மில்லியன் ஆனது 2022 செப்டெம்பர் 15 வரையில் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒரு வருடத்திற்கும் மேலாக காணப்படகின்ற ஏனைய செலுத்த வேண்டிய கட்டணங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலக்கப்பட்ட பயிற்சிக்கு செலுத்த வேண்டிய ரூபா 1 மில்லியன் மற்றும் 2021 டிசம்பர் 31 இல் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக காணப்படுகின்ற அட்டுறு செலவுகளாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 1.4 மில்லியன் ஆனது 2022 செப்டம்பர் 20. வரை தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2021 டிசம்பர் 31 வரை நிர்மாணப் பணிகள் இரத்துச் செய்யப்பட்டிருந்த 04 பயிற்சி நிலையங்கள் மற்றும் ஆரம்ப அளவுகளில் குறைபாடு காணப்பட்ட காரணத்தினால் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்த ஹோமரன்கடவல பயிற்சி நிலையக் கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 62.6 மில்லியன் ஆன நிர்மாண முற்பணம் இதுவரை தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தேசிய உபகரண மற்றும் இயந்திரங்கள் அமைப்பிற்கு தேசிய இளைஞர் படையணியின் 10 புதிய நிலையங்கள் மற்றும் தற்போதுள்ள நிலையங்களின் 21 கட்டிட அலகுகளுக்கான நிர்மாணங்களுக்கான ஒப்பந்தம் திறந்த டென்டர் நடைமுறைக்கு முரணாக வழங்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நிர்மாணங்களின் முன்னேற்றம் தோல்வியடைந்ததால் 2020 சனவரி 30 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்நிர்மாண ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. என்னும் தேசிய இளைஞர் படையணியால் அந் நிறுவனத்திற்கு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த ரூபா 109.2 மில்லியன் ஆன மொத்த முற்பணத் தொகையில் ரூபா 37.6 மில்லியன் இந்நிர்மாண நடவடிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்து விட்ட போதிலும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தேசிய இளைஞர் படையணியின் தலைமை அலுவலகத்தில் பயன்படுத்தப்படுகின்ற பதிவுரிமை வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்குச் சொந்தமான ரூபா 31.5 மில்லியன் பெறுமதியான 08 வாகனங்கள் இதுவரை படையணியின் பெயரில் கையேற்கப்படவில்லை.

(ஊ) 2021 டிசம்பர் 31 இல் பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டிருந்த மற்றும் படையணிக்கு கையேற்க முடியுமாகவிருந்த 62 காணிகளில் 19 காணிகள் மாத்திரமே படையணிக்கு கையேற்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 43 காணிகளின் கையேற்றல் நடவடிக்கைகள் இதுவரை முடிக்கப்பட்டிருக்க வில்லை.

(எ) 2017 ஆம் ஆண்டில் பணிகள் தொடங்கப்பட்டு 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் நிர்மாண ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்ட நடைமுறை வேலைகளில் உள்ளடங்கியுள்ள ரூபா 20 மில்லியன் ஆன 02 பயிற்சி நிலையங்கள் மற்றும் ரூபா 3.7மில்லியன் ஆன கோமரன்கடவல பெரசவி கட்டிடத்தில் 3.7 மில்லியன் ரூபாயில். மீதமுள்ள கட்டுமானப் பணிகள் 2022

ஒக்டோபர31 வரை மீண்டும் தொடங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2011 டிசம்பர் 15 திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, நாட்டில் இளைஞர் சமுதாயத்தை மேம்படுத்தும் பணியை சிறப்பாகவும், திறம்படவும் மேற்கொள்வதற்கு, தற்போதுள்ள இளைஞர் படையணிச் சட்டத்தைத் திருத்தியமைத்து, புதிய சட்டமொன்று இயற்றப்பட வேண்டியபோதிலும் அதற்காக 11 வருடங்களுக்கும் அதிக காலம் கடந்து விட்ட போதிலும் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஜ) 2002 இன் 21 ஆம் இலக்க இளைஞர் படையணிச் சட்டத்தின 18 ஆம் பிரிவின கீழ் 2003 ஒக்டோபர் 10 ஆம் திகதிய கட்டளைகளின் 4(ii) பிரகாரம் படையணியால் சர்வதேச தொழிலாளர் சந்தையை இலக்காகக் கொண்டு, பல்வேறு துறைகளில் காணப்படும் தேசிய தொழிற்கல்வித் தகுதி பயிற்சியாளர்களுக்கு பெறப்பட முடியுமான கற்கைநெறி அரச தொழிற்பயிற்சி நிலையங்களுடன் இணைந்து தயாரிக்கப்பட்டு பயிற்சியாளரகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) படையணியால் 66 தனியார் நிறுவனங்களில் 132 கற்கைநெறிகள் மற்றும் 20 அரச தொழிற்கல்வி கற்கைநெறிகள் படிப்பதற்கு மட்டுமே தொழிற்பயிற்சி அளிக்குமாறு பயிற்சியாளர்கள் அனுப்பப்பட்டுள்ளனர். அதற்காக ஒரு பயிற்சியாளருக்கு அதிகபட்ச பயிற்சிக் கட்டணம் ரூபா 100,000 நிர்ணயிக்கப்பட்டிருந்தும் கிரயம் ரூபா 100,000 மற்றும் ரூபா 800,000 இற்கிடைப்பட்ட வீச்சில் கற்கைநெறிகள பயிற்சியாளர்களிடம் எடுக்கப்பட்டிருந்தது. மேலும், தொழிற்கல்வி கற்கைநெறிகளுக்கு அனுப்பப்படுகின்ற பயிற்சியாளர்கள், கற்கைநெறிகளை நிறைவு செய்து வேலை கிடைக்கும் வரை, கண்காணிக்கும் முறைமையொன்றும் படையணியால் தயார் செய்யப்பட்டிருக்கவில்லை.

டபிள்யு.பி.சி.விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் அதிபதி

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பான தவிசாளரின் அவதானிப்புகள்



கணக்காய்வாளர் அதிபதி,
தேசிய கணக்காய்வு அலுவலகம்
இல.306/72
பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

தேசிய இளைஞர் படையணியின் 2021 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வேறு சட்ட தேவைப்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளரின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 கருத்து

1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கருத்து தெரிவித்தல்

(அ) இலங்கை அரசாங்க கணக்கியல் தரநிலைகளிலிருந்து விலகல்

(i)

இளைஞர் படையணிக்குச் சொந்தமான ரூபா 410,208,852/- பெறுமதியான சொத்துக்கள் தொடர்பாக, இ.க.தரநிலை இல 07 இன் 65 இன் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். இந்தச் சொத்துக்கள் முழுவதுமாக தேய்மானம் அடைந்துள்ளதால் அதனை மீள்மதிப்பீடு செய்து 2022 ஆம் ஆண்டில் கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

(ii)

கணக்கியல் கொள்கை மென்பொருள் மற்றும் இணையதளங்களை 25% தேய்மானம் செய்வதற்கு சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், கணக்கு அறிக்கையில் கொள்கைகளை பதியும் போது தவறுதலாக 25மூ சதவீதம் பதிவு செய்யப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். 2022 ஆம் ஆண்டு கணக்குகளைத் தயாரிக்கும் போது அதனை சரியாகக் குறிப்பிடுவேன்.

(ஆ) இதன் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் 2022 ஆம் ஆண்டு கணக்குகளில் சரிசெய்யப்பட்டுள்ளன.

(இ) கோமரன்கடவல, கம்பளை, மொனராகலை நிலை ஜ, மொனராகலை நிலை II, மொனராகலை நிலை III, மொனராகலை நிலை ஜஏ, நாவுல யுடீவு, திருகோணமலை ஆகிய தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையங்கள் தொடர்பாக, ரூ:518,467,445/- தொகை நிதி நிலமை அறிக்கைகளில் பணிகள் நடந்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய, இந்தப் பயிற்சி நிலையங்களின் கட்டிடக் நிர்மாணப் பணிகள் 2021.12.31 திகதிக்குள் நிறைவடைந்துள்ளன. எனினும் இறுதிப் பட்டியல்கள் 2021 ஆம் ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதற்கிணங்க, கோமரன்கடவல மற்றும் திருகோணமலை பயிற்சி நிலையங்களின் இறுதிப் பட்டியல்கள் 2022.06.01 ஆம் திகதியும் மொனராகலை கட்டம் iV பட்டியல்கள் 2022.01.18 ஆம் திகதியும் தீர்க்கப்பட்டுள்ளன. அதற்கமைய 2022 ஆம் ஆண்டுக்கான நிதி நிலைமை அறிக்கைகளில் மூலதனமாக்கி சமர்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ஈ) இங்கு தரப்பட்டுள்ள பயிற்சி நிலையங்களின் நிர்மாணப் பணிகள் புனரமைப்புத் திட்டங்களின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இறுதிப் பட்டியல்களும் செலுத்தப்பட்டுள்ளன.

(உ) திஸ்ஸமஹாராமய, லுணுகம்வெஹெர, தெஹியத்தகண்டியில் உள்ள தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையங்கள் தொடர்பான நிதி நிலமை அறிக்கைகளில் ரூ.226,028,860/- தொகை பணிகள் நடைபெற்று வருவதாகக் காட்டப்பட்டுள்ள போதிலும், இந்தப் பயிற்சி நிலையங்களின் கட்டிட நிர்மாணப் பணிகள் 2021.12.31 ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டு, பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படவுள்ளன. எனினும், இந்தப் பயிற்சி நிலையங்களின் இறுதிப் பட்டியல்கள் தீர்க்கப்படவில்லை.

தற்போது இறுதி விலைப்பட்டியல்கள் தீர்க்கப்பட்டு வருவதால், 2022 நிதி நிலமை அறிக்கைகளில் அவற்றை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

(ஊ) 2021.12.31 ஆம் திகதியளவில் துணை ஒப்பந்ததாரர்களால் பணிகள் நிறைவுசெய்யப்பட்டு இந்தப் பயிற்சி நிலையங்களின் கட்டுமான ஒப்பந்தப் பணிகள் முடிந்ததற்கான சான்றிதழ்கள் கணக்காய்வு விசாரணைகள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அந்தப் பயிற்சி நிலையங்களின் நிர்மாணப் பணிகள் 2022 ஆம் ஆண்டில் மூலதனமயப்படுத்தப்படும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினரின் பொறுப்பு

1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

2.2.2

(i) 5.1 பந்தி

2023-2027 ஆம் ஆண்டிற்கான தேசிய இளைஞர் படையணியின் நிறுவனத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதனை திருத்துவதற்காக நிபுணத்துவமுள்ள ஆலோசகருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(ii) 6.5.1 பந்தி

2021 நிதி நிலமை அறிக்கைகள் 2022 மே மாதத்திற்குள் தயாரிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டு, ஜூன் மாதம் சபையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கப்படும் போது அந்தத் தாமதம் குறைக்கப்படும். மேலும் குறிப்பிட்ட காலத்திற்குள் வருடாந்த நிதி நிலைமை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும்.

2.2.4

(அ) வாகன முகாமைத்துவம்

கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தேசிய இளைஞர் படையணிக்கு சொந்தமான வாகனங்களின் பதிவு உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவான முன்னேற்றம் இல்லாத போதும் அந்தந்த தேவைகளுக்கு ஏற்ப அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இந்த வாகனங்கள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு அமைச்சுக்களின் கீழ் இருந்தமை மற்றும் தற்போது அந்த அமைச்சுக்கள் வேறு பெயர்களில் இயங்குதல் போன்ற பல காரணிகளால் அந்த வாகனங்களின் அசல் பதிவுகளைப் பெறுவது நடைமுறையில் கடினமான விடயமாக உள்ளது. இவ்வாறான பல காரணிகளினால் இந்த வாகனங்களை தேசிய இளைஞர் படையணியிடம் கையேற்பதில் சற்று தாமதம் ஏற்பட்டுள்ளதை குறிப்பிட விரும்புகின்றேன்.

(ஆ) முகாமைத்துவ திறமையின்மை

(i) தேசிய இளைஞர் படையணியின் ஹோட்டல் பயிற்சிப் பாடசாலை, வெளியிட பயிற்சி நிலையம் மற்றும் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படும் பயிற்சி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை பின்வருமாறு.

தற்போது இயங்கும் பயிற்சி நிலையங்கள்	57
வெளியிடப் பயிற்சி நிலையம்	01
ஹோட்டல் பயிற்சிப் பாடசாலை	01
நிர்மாணிக்கப்படும் பயிற்சி நிலையங்கள்	06
மொத்தம்	**65**

மேற்படி பயிற்சி நிலையங்களில் வெளியிடப் பயிற்சி நிலையம் மற்றும் நாவுல பயிற்சி நிலையம் ஆகிய 02 நிலையங்களும் ஒரே காணியில் அமைந்துள்ளன. மேலும், சூரியவெவ தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் இலங்கை மகாவலி அதிகாரசபையின் சூரியவெவ மகாவலி வளாகத்தின் ஒரு பகுதியில் பராமரிக்கப்படுகிறது. அத்துடன் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுக் கூடத்தின் ஒரு பகுதியில் கிளிநொச்சி பயிற்சி நிலையம் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

அதற்கிணங்க, இந்தப் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ள காணிகளிலிருந்து சுவீகரிக்க முடியுமான காணியின் அளவு 62 ஆகும். அந்த 62 காணிகளில் இதுவரை 19 காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய 43 காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த 43 காணிகளில் 17 காணிகள் தொடர்பான சுவீகரிப்பு நடவடிக்கைகள் ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அதில் 07 காணிகளை ஒதுக்கீடு செய்வதற்கு பிரதேச செயலாளர்கள் மற்றும் மாகாண காணி ஆணையாளர்களால் பரிந்துரைக்கப்பட்டு காணி ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ள காணி சுவீகரிப்பு தொடர்பில் காணி ஆணையாளர் நாயகத்தின் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் அக்கலந்துரையாடலில் காணி ஆணையாளர் நாயகம் திணைக்கள அதிகாரிகள் தற்போது குறிப்பிட்ட அளவிற்கு காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ள காணிகளை சுவீகரிப்பதற்கும் ஏனைய காணிகளை அரசாங்க காணிக் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் (1/2%) பெயரளவிலான வரித் தொகையின் கீழ் விடுவித்துக்கொள்வது பொருத்தமென சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, அரசாங்க காணி கட்டளைச் சட்டத்தின் 6 ஆவது பிரிவின் கீழ் கையகப்படுத்தும் ஆரம்ப கட்டத்தில் உள்ள காணியை பெயரளவு வரித் தொகையான அரை சதவீதத்தின் கீழ் (1/2%) விடுவிக்குமாறு காணி ஆணையாளர் நாயகத்திடம் கோரப்பட்டுள்ளது. தற்போது குறித்த கோரிக்கைகள் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தினால் அந்தந்த பிரதேச செயலாளர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(ii)

பயிற்சி நிலையம்	2021.12.31 ஆம் திகதிக்கு நடைபெறும் வேலையின் பெருமதி (ரூ)	ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டமைக்கான காரணம்
கொட்டபொல	18,149,844.00	இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் தாமதமானதால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டது. எஞ்சிய முற்பணங்களை ஒப்பந்ததாரரிடம் இருந்து மீளப்பெறுவதற்கு சட்டமா அதிபரிடம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சின் செயலாளரின் ஒப்புதலுக்கு அமைய தொழிற் பயிற்சி அதிகார சபையிடம் இந்தக் கருத்திட்டம் கையளிக்கப்பட்டுள்ளது.
கல்பிட்டி	1,826,345.00	கல்பிட்டி பயிற்சி நிலையத்தின் நிர்மாண ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்த நிறுவனம் எற்புடைய வங்கியுடன் வைத்திருக்கும் செயல்திறன் மற்றும் முற்பண உத்தரவாதங்களின் தொகைகள் தேசிய இளைஞர் படையணியினால் அறவிடப்பட்டது.
கோமரன்கடவல பெரசவி கட்டிடம்	3,692,442.00	கோமரன்கடவல பயிற்சி நிலையத்தை நிர்மாணிப்பதற்கு முன்னர், அந்த இடத்தில் முன் கட்டமைக்கப்பட்ட பயிற்சி நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. எனினும், கோமரங்கடவலையில் புதிய பயிற்சி நிலையம் நிர்மாணிக்கப்படும் போது முன்னைய கட்டடம் கட்டும் பணி நிறுத்தப்பட்டுள்ளது. இக்கட்டடத்தின் ஆரம்ப அளவீட்டுப் பத்திரங்களில் குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டு, குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு, எதிர்கால ஒதுக்கீட்டின்படி கட்டிடத்தின் மீதமுள்ள பணிகள் தீர்க்கப்படும். அதன் மூலம் முற்பணத் தொகையையும் தீர்வை செய்யப்படும்.

(இ) அமைச்சரவையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமை.

(i) 10 புதிய பயிற்சி நிலையங்கள் மற்றும் ஏற்கனவே உள்ள 21 பயிற்சி நிலையங்களின் கட்டிட அலகுகள் மற்றும் நு1, நு2 32 கழிப்பறை அமைப்புகளை நிர்மாணிப்பதற்கான விலைமனுக்கள் கோரப்படாமல் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் தேசிய இளைஞர் படையணியில் செய்யப்பட வேண்டிய நிர்மாணப் பணிகள் அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் தேசிய இயந்திரசாதன நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. எனினும் இந்த நிறுவனத்தினால் சரியான முன்னேற்றம் காட்டப்படாத காரணத்தினால் 2020 ஜனவரி 30 திகதிய 20/0166/220/007 எனும் அமைச்சரவை முடிவின் பிரகாரம் எற்புடைய ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்டன. மேலும், கட்டுமானப் பணியின் 50% க்கும் அதிகமான முன்னேற்றத்தைக் காட்டியுள்ள கட்டுமான துணை ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தங்களை வழங்கவம் அனுமதி அளிக்கப்பட்டது. அதற்கிணங்க, 50% க்கும் அதிகமான முன்னேற்றத்துடன் 13 கட்டிடங்களில் 11 அலகுகளும் மற்றும் E 1 கழிப்பறை அமைப்புகள் 3 துணை ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டு நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் மேற்படி அமைச்சரவை பத்திரத்தில் இருந்து 50மூ க்கும் குறைவான முன்னேற்றம் கொண்ட நிர்மாணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு விலைமனு கோருவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. பின்னர் 50மூ க்கும் குறைவான முன்னேற்றம் கொண்ட நிர்மாணங்களும் 2021.09.07 ஆம் திகதிய மற்றும் mg/21/1527/329/026 இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் துணை ஒப்பந்தக்காரர்கள் மூலம் நிறைவேற்றிக்கொள்ள மீண்டும் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் 50% க்கும் குறைவாக இருந்த சூரியவெவ பயிற்சி நிலையத்தின் E 1 கழிவறை அமைப்பு துணை ஒப்பந்ததாரர் மூலம் நிறைவுசெய்யப்பட்டது.

மேலும், இந்த இடைநிறுத்தப்பட்டிருந்த நிர்மாணப் பணிகள் அனைத்தையும் 2021 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்காக ஒதுக்கீடுகளைக் கோரிய போதிலும், பொதுச் செலவின முகாமையின் கீழ் தேசிய வரவு செலவுத் திட்ட இல. 03ஃ2022 மற்றும் 2022.04.26 திகதிய சுற்றறிக்கையின்படி போதுமான ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறாத காரணத்தினால் செயல்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. 50மூ க்கும் குறைவான முன்னேற்றத்துடன் காணப்படும் மீதமுள்ள கட்டுமானங்களை அடுத்த 5 ஆண்டுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(ஈ) செலுத்த வேண்டிய மற்றும் பெறவேண்டிய நிலுவைகள்

(i) வென்னப்புவ தேசிய இளைஞர் படையணிப் பயிற்சி நிலையத்தின் கட்டுமானப் பணிகளுக்காக, அந்தோணி பில்டர்ஸ் நிறுவனத்திற்கு ரூ:4,162,172.06 (வரி உட்பட) அதிகமாக செலுத்தப்பட்டுள்ளது. தேசிய இளைஞர் படையணியினால் கட்டுமான பட்டியல்களை செலுத்தும் போது ரூ:2,186,129.50 (வரி உட்பட) தொகை தடுத்து வைக்கப்பட்டது. குறிப்பிட்ட தொகையை தொடர்புடைய தக்க வைப்புத் தொகையில் இருந்து அறவிடுமாறு நிதிப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனம் மேற்கொண்ட கருத்திட்டத்திட்டமான மகநெகும கருத்திட்டத்திலிருந்து மீதித் தொகையான ரூ:1,976,042.56- ஐ அறவிடுமாறு மேற்படி நிறுவனம் இந்த தலைமையகத்திற்குத் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் மகநெகும நிறுவனத்திற்கும் அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த இணைப்புக் கடிதம் (இணைப்பு 01) ஆக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ii) தேசிய இளைஞர் படையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டத்தில் செய்யப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், சிறு தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவின் நீர் மின்சாரம் மற்றும் வரிப்பணத்திற்காக 2015 ஆம் அண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையில் அறவிட வேண்டிய ரூ.13,144,155/57 தொகையை வருடாந்த கணக்குகளில் இருந்து வெட்டிவிடுவதற்கு தேசிய இளைஞர் படையணிப் பேரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதற்கமைய 2022 ஆம் ஆண்டு கணக்குகளில் ஏற்புடைய செம்மையாக்கல்கள் செய்யப்படும். மேலும், 2021 ஆம் ஆண்டு முதல் சிறு தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவினால் ஏற்புடைய பட்டியல்களின் பெறுமதி மாதாந்தம் தீர்க்கப்பட்டுவருகின்றன.
(கை) தீர்க்கப்படாத தொகையாக காட்டப்பட்டுள்ள ரூ.1,006,529/80 – பெறுமதியை 2022 ஆம் ஆண்டின் புத்தகங்களிலிருந்து வெட்டிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(iv) திரண்ட செலவினங்களின் கீழ் தீர்க்கப்படாதுள்ள ரூ.1,426,321/- மீதி பின்வருமாறு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, 2022 ஆம் ஆண்டில் பின்வருமாறு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2022 ஆம் ஆண்டுக் கணக்குகளின் சேர்க்கப்பட்டுள்ளன.

வருடம்	செலவினம்	விபரம்	தொகை	முன்னேற்றம்
2018	Furniture & office equipment			
(capital)	Richco Associated	15,985.00	2022 ஆம் ஆண்டில் வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது.	
2019	Building structure payable	Ceylon Engineering	1,335,636.00	வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
2019	Building Rehabilitation	P.D.R. Siriwardhana	74,700.00	கொடுப்பனவு செய்வதற்கு மேல் அறிவுறுத்தல் பெற்றுக்கொள்வதற்கு சபைப் பத்திரமொன்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
மொத்தம்			1,426,321.00	

(உ) கிடைக்க வேண்டிய முற்பணம்

(i) கம்பளை பயிற்சி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 2021.12.31 இல் நிறைவடைந்ததோடு, அதன் இறுதிப் பட்டியல் செலுத்தப்படவில்லை. செங்கடகல பயிற்சி நிலையத்தின் நிர்மாணிப் பணிகளையும் இந்த ஒப்பந்ததாரரே மேற்கொண்டிருந்த காரணத்தினால் தீர்க்கப்பட வேண்டியிருந்த முற்பணத் தொகை மற்றும் கம்பளை நிர்மாணத்தின் போது தீர்வளிக்கப்பட வேண்டியிருந்த ரூபா: 4,698,452.50 தொகை என இரண்டு நிர்மாணங்களுக்கும் தக்கவைப்புப் பணம் மற்றும் இறுதிப் பட்டியல் 2022 ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டுள்ளது.

(ii) வெலிமடை, மீகஹகிவுல, கொட்டபொல மற்றும் பெல்மடுல்ல பயிற்சி நிலையங்களின் நிர்மாண ஒப்பந்தங்கள் இரத்து செய்யப்பட்டன. அதற்கமைய, வெலிமடை மற்றும் மீகஹகிவுல பயிற்சி நிலையங்களின் முற்பணம் செலுத்துவது தொடர்பாக தீர்ப்பாளர் (யுனதரனஅ உயவழச) ஒருவருக்கு சமர்ப்பிக்கப்பட்டு 2022.02.28 ஆம் திகதி தீர்மானம் வழங்கப்பட்டது. அந்தத் தீர்வுக்கு ஒப்பந்ததாரர் சம்மதிக்காத காரணத்தினால் இரு தரப்பினரின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடுவர் (Arbitration) நியமிக்கப்பட்டார். அதற்கான மேலதிக பணிகள் நடைபெற்று வருவதாகவும், 2022.10.26 ஆம் திகதி முதல் கூட்டம் நடத்தப்பட்டுள்ளதோடு, அடுத்த கூட்டம் 2023.03.14 ஆம் திகதி நடைபெற உள்ளது.

கொட்டபொல பயிற்சி நிலையத்தின் நிர்மாண ஒப்பந்த உடன்படிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான முற்பணத்தை மீளப்பெறுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஏற்புடைய கோவை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பெல்மடுல்ல தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் இரத்து செய்யப்பட்டுள்ளதுடன், தம்புள்ளை (திகம்பத்தனை) தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையத்தின் நிர்மாணப் பணிகளை குறித்த ஒப்பந்ததாரர் மேற்கொள்வதால், பெல்மடுல்ல தேசிய இளைஞர் படையணியின் முற்பணத் தொகை மீளப் பெற்றுக் கொள்ளப்படும். அதற்கமைய, தம்புள்ளை இளைஞர் படையணியின் பட்டியல்கள் செலுத்தும் போது 2022.03.15 ஆம் திகதி முற்பணமாக ரூ.2,000,000.00 அறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய தொகை எதிர்கால கொடுப்பனவுகளில் கழிக்கப்படும்.

கோமரன்கடவல பயிற்சி நிலையம் அமைக்கப்படுவதற்கு முன்னர் அந்த இடத்தில் முன் கட்டப்பட்ட பயிற்சி நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. ஆனால் புதிய கோமரன்கடவல பயிற்சி நிலையம் நிர்மாணிக்கப்படும் போது முன் கட்டப்பட்ட கட்டிடத்தின் கட்டுமானம் நிறுத்தப்பட்டது. இக்கட்டடத்தின் ஆரம்ப அளவீட்டுப் பத்திரங்களில் குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டு, 2023 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டத்தில் கட்டுமானத்தை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மீதமுள்ள முற்பணம் தீர்க்கப்படும்.

(iii) தேசிய இளைஞர் படையணியின் வலுவூட்டல் காரணமாக, 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டில் ஏற்கனவே உள்ள பயிற்சி நிலையங்களில் 10 புதிய நிலையங்கள் மற்றும் 21 கட்டுமான கட்டிட அலகுகளை நிர்மாணிப்பதற்கான விலைமனுக்கள் கோரப்படாமலேயே தேசிய இயந்திரசாதன நிறுவனத்திற்கு அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் அந்த நிறுவனத்தினால் நிர்மாணப் பணிகள் தாமதம் அடைந்த காரணத்தினால் அனைத்து கட்டுமானங்களும் 2020 ஆம் ஆண்டு அமைச்சரவைப் பத்திரத்தால் இரத்து செய்யப்பட்டன.

இந்த கட்டுமானத்திற்காக அந்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட முற்பணமான ரூ:71,618,995 தொகை தற்போது தீர்க்கப்பட்டுள்ளது. மேலும் செலுத்த வேண்டிய முற்பணத் தொகையான ரூ:37,615,680 ஐ இறுதிப் பட்டியல் தீர்வின் போது அறவிடப்படும். தேசிய இயந்திரசாதன நிறுவனத்திற்கும் கட்டடத் திணைக்களத்திற்கும் பலமுறை எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் பட்டியல்களை தீர்க்குமாறு தெரிவித்தும் இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

2.3 வேறு விடயங்கள்

(i) தேசிய இளைஞர் படையணி 2015 ஆம் ஆண்டு முதன் முறையாக தனது ஆண்டுக் கணக்குகளைத் தயாரித்தது, அந்த நேரத்தில் நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கப்பட்டது.
இது கணினி Excell மென்பொருளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றது. அந்த ஆண்டிற்குப் பிறகு, பல புதிய பயிற்சி நிலையங்கள் கட்டப்பட்டன, மேலும் அந்த பயிற்சி நிலையங்களுக்கு மொத்தமாக பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன. அந்த கொள்வனவுகளுக்கு ஏற்ப நிலையான சொத்துப் பதிவேட்டை இற்றைப்படுத்துவது நடைமுறையில் சிக்கலாக இருந்தது.

2021 ஆம் ஆண்டில் இசைக்கருவி மறுமதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன, அதில் அந்தக் கருவிகள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு புதுப்பிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில், ஏனைய பொருட்கள் தொடர்பில் மீள்மதிப்பு செய்யப்படும். அதற்கமைய, நிலையான சொத்துக்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்படும்.

(ii) 2022 ஆம் ஆண்டு முதல், தடுத்து வைக்கப்பட்ட பணம் மற்றும் முற்பணம் தொடர்பான ஆவணம் நுஒஉநடட கணினிகளில் சேர்க்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு முதல் அந்தப் பதிவேடு பராமரிக்கப்படுகின்றது.

(iii) அமைச்சின் கணக்கில் வைக்கப்பட்டுள்ள 17 மில்லியன் ரூபா பணத்தில் கிட்டத்தட்ட பாதியளவு தொகையில் இறுதி விலைப் பட்டியல்கள் தீர்க்கப்படாத காரணத்தினால் அதற்கு ஏற்புடைய தடுத்து வைப்பு பணத்தை விடுவிக்க முடியாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மேலும், ஏனைய நிலுவைத் தொகைகளை இந்த ஆண்டுக்குள் உடனடியாக செலுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஏற்புடைய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(iv) இல. mg11/0157/539/005 மற்றும் 2011 பெப்பரவரி 10 ஆம் திகதிய அமைச்சரவை முடிவின் மூலம் இளைஞர் படையணிச் சட்டத்தில் திருத்தம் செய்து, இளைஞர் படையணியை சட்டப்பூர்வமாக நிறுவப்பட்ட நிறுவனமாகக் கருதி, ஏற்புடைய சட்டம் திருத்தப்படும் வரை இளைஞர் படையணியின் நிர்வாக மற்றும் நிதி அதிகாரங்கள் அமைச்சின் செயலாளரின் முழு மேற்பார்வையின் கீழ் பணிப்பாளருக்கு வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, தேசிய இளைஞர் படையணியை அதிகாரசபையாக மாற்றுவதற்கான தேசிய இளைஞர் படையணி அதிகாரசபைச் சட்டம் 2011 ஆம் ஆண்டில் வரைவு செய்யப்பட்டு, சட்ட வரைஞரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்பிறகு, இந்த வரைவு சட்டமூலத்தில் பல முறை திருத்தங்கள் செய்யப்பட்டு, திருத்தப்பட்ட வரைவு இல L.D.O 47/2011 சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் பதவியேற்றதையடுத்து, திருத்தப்பட்ட வரைவுப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதோடு, மீண்டும் 2019ஆம் ஆண்டு முதல் சட்ட வரைஞர் திணைக்களத்தின் உதவியுடன் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் நீதி அமைச்சின் செயலாளருக்கு தேசிய இளைஞர் படையணி அதிகாரசபை சட்டமானது முன்னுரிமை அடிப்படையில் கையாளப்பட வேண்டிய சட்டமூலமாகும் என தெரிவித்ததையடுத்து, இறுதியாக திருத்தப்பட்ட சட்டமூலத்தை அடிப்படையாகக் கொண்டு வேறு திருத்தங்கள் எதுவும் இல்லை என இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரினால் 2021.06.30 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பின்னர், சட்டமா அதிபர் திணைக்களம் 2021 செப்டம்பர் 24 ஆம் திகதி சட்ட வரைஞருக்கு அவதானிப்புகள் மற்றும் திருத்தங்களை அனுப்பியது. மேற்படி திருத்தங்களின்படி தயாரிக்கப்பட்ட வரைவு சட்ட வரைஞர் திணைக்களத்தினால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு 2021 நவம்பர் 16 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைவை அவதானித்த சட்டமா அதிபர் இந்த வரைவின் விதிகள் அரசியலமைப்பிற்கு முரணானவை அல்ல என்றும் பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் விதிக்கப்பட்ட தடை அல்லது வரம்புக்கு உட்பட்டவை அல்ல என்றும் பரிந்துரைத்துள்ளார். எனவே பாராளுமன்றத்தால் அதனை அமுல்படுத்த முடியுமென 2022 பெப்ரவரி 22 ஆம் திகதிய கடிதத்தின்

மூலம் பரிந்துரை செய்துள்ளார்.
அதன் பின்னர் அமைச்சரவையின் அனுமதிக்கா சமர்பிக்கப்பட்டது. எனினும், நாட்டில் ஏற்பட்ட எழுச்சியுடன் அமைச்சரவையும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரும் மாற்றப்பட்டதால் மீண்டும் பின்னடைவு ஏற்பட்டது. தற்போது, தற்போதைய விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரின் முயற்சியின் கீழ் இது தொடர்பான வரைவை அமைச்சரவையின் அனுமதிக்கு சமர்ப்பிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(v) 2015 ஆம் ஆண்டு தேசிய இளைஞர் படையணி பேரவை நிறுவப்பட்ட பின்னர், 2015.10.23 ஆம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில், சட்டத்தின் 2(4) பிரிவின்படி சபையின் விவகாரங்களை நிர்வகிப்பதற்கு 03 குழுக்களை நியமிப்பதற்காக, சபை பத்திரம் 33 பிரகாரம் குழுக்களை நியமிப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் கோரப்பட்டுள்ளன. தொழிற் பயிற்சிக் குழு, இளைஞர் அபிவிருத்தி குழு மற்றும் வேலை வாய்ப்பு குழு என 03 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அதற்காக 2017ஆம் ஆண்டு 03 பேரவை உறுப்பினர்கள் அந்தந்த குழுக்களுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். அதற்கமைய, 03 குழுக்கள் நியமிக்கப்பட்டு பராமரிக்கப்பட்ட போதிலும் சபை உறுப்பினர்களில் அவ்வப்போது எற்பட்ட மாற்றங்கள் காரணமாக 03 குழுக்களை நியமித்து குழு உறுப்பினர்களுக்கான ஏற்பாடுகளை வழங்குவதில் ஏற்பட்ட சிக்கல்களாலும் அவற்றை முறையாக பராமரிக்க முடியாத நிலையில் உள்ளது. எவ்வாறாயினும், இந்தக் குழுக்களின் மீள் நியமனம் தொடர்பான தீர்மானம் 2022 ஜனவரியில் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. அங்கு ஏற்பாடுகள், ஒதுக்கீடுகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்காலத்தில் குழுக்களை நியமிப்பது தொடர்பில் ஆலோசனைகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, எதிர்காலத்தில் தேசிய இளைஞர் படையணி பேரவையின் அனுமதிக்கு அமைய செயலூக்கமுள்ள குழுக்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

(vii) தேசிய இளைஞர் படையணியின் வாழ்க்கைத் திறன் பாடநெறியில் இணையும் பயிற்சியாளர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழி பாடங்கள் கற்பிக்கப்பட்டன. வாழ்க்கைத் திறன் பாடநெறியில் சேரும் பயிலுனர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழி பாடத்தில் பெறுமதியான சான்றிதழை வழங்கும் நோக்கில், இலங்கை சர்வதேச பௌத்த அகடமி (ளுசஅ டுயமெய ஐவெநசயெவழையெட டீரனனாளைவ யுஉயனநஅல-ளுஐடீயு) மூலம் உயர் சான்றிதழ் கற்கைநெறிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

வெவ்வேறு கல்வி நிலைகளைக் கொண்ட பாடசாலைகளை விட்டு வெளியேறிய உயர்கல்விக்கான பாதை இல்லாத பயிற்சியாளர்களுக்கு உயர்கல்வியில் நுழைவதற்கான அடிப்படை அடித்தளமாக இந்த பாடநெறி அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், பாடநெறி சான்றிதழ் பயிற்சியாளர்களுக்கு தேவையான அடிப்படை தகுதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஆர்வத்தை வழங்குகிறது. மற்றும் ளுஐடீயு நிறுவனத்தினால் ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில்நுட்ப பட்டப் படிப்புகள் வரை தொடர்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டப் படிப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கு மாத்திரமே அங்கீகாரம் வழங்கப்படுகின்றது. அதற்காக ஒரு நிறுவனம் கல்வி நிறுவனமாக ஏற்புடைய தேவைகளை பூர்த்தி செய்தல் வேண்டும். இது அதிக நேரத்தையும் செலவையும் எடுக்கும். மேலும், 2002 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்த்திற்கு அமைய தேசிய இளைஞர் படையணி இளைஞர் மேம்பாடு, தொழிற் பயிற்சி மற்றும் தொழிற்கல்வி ஆகியவற்றை முதன்மை நோக்கமாகக் கொண்ட ஒரு நிறுவனமாக விளங்குகின்றது. இதுவரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் படிப்புகளை செயல்படுத்துவதற்கான வாய்ப்பும் அனுமதியும் கிடைக்கப்பெறவில்லை. மேலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இதுவரை குறுகிய கால பாடநெறிகளுக்கும் (சான்றிதழ்கள் மற்றும் டிப்ளோமாக்கள்) அனுமதி வழங்கவில்லை. எனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட குறுகிய கால பாடநெறிகளை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புகளும் இல்லை.

இளைஞர்களுக்காக குறுகிய கால பாடநெறிகளை நடத்தும் அரச நிறுவனங்கள் இருந்த போதிலும் அந்த நிறுவனங்களுக்குச் செல்லாமல் தேசிய இளைஞர் படையணியினால் நடத்தப்படும் பாடநெறிகளுக்குச் செல்வது பயிற்சியாளர்களின் விருப்பத்தைப் பொருத்தது. அத்தகைய பாடநெறிகளை செயல்படுத்தும் அரச நிறுவனங்களில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழி பாடநெறிகளுக்கு பயிற்சியாளர்களை தெரிவு செய்யும் போது க.பொ.த சாதாரண தரப் பெறுபேறு என்பது குறைந்தபட்சத் தகுதியாகக் கருதப்படுகின்றது. எம்மிடம் வரும் பயிற்சியாளர்களில் பெரும்பாலானோர் பாடசாலை இடைவிலகியவர்கள், க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர் தரம் சித்தியடையாதவர்களாக காணப்படுகின்றனர். எனவே, பெரும்பாலான பயிலுநர்களுக்கு பாடநெறிகளை தொடர்வதற்கான வாய்ப்பு இழக்கப்படலாம். எனவே, இளைஞர்கள் விரக்தியடைந்து, அதிருப்தியுடன் இருக்கும் போது அவர்கள் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடத் தூண்டுவதால் நாட்டில் பல சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் உருவாகும் போக்கு உள்ளது.

அவ்வாறான அரச நிறுவனங்கள் மூலம் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழி தொடர்பான பாடங்களை செயல்படுத்தும் செயல்முறைக்கு இரண்டு அரச நிறுவனங்கள் நிறுவன கட்டமைப்புகளில் தேவையான ஒப்புதல்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும் போது, நிறுவப்பட்ட கட்டமைப்புகள், சுற்றறிக்கைகள் மற்றும் நிறுவனங்களுக்கு இயைபான விதத்திலான நிபந்தனைகள் மற்றும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளை பின்பற்ற நீண்ட காலம் எடுக்கும். அவ்வாறே, எங்களிடம் வரும் பயிற்சியாளர்களுக்கு அங்கீகாரம் பெற்ற மற்றும் பட்டப்படிப்பு மட்டத்திற்கு பரிந்துரைக்கக்கூடிய பாடநெறிகளை வழங்குவதற்கு இவ்வளவு நீண்ட காலத்தை செலவிடுவதன் மூலம், திறமையான மற்றும் பயனுள்ள சேவையை வழங்குவதற்கான வாய்ப்பும் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பட்டப்படிப்பை அடையக்கூடிய ஒரு சான்றிதழை வழங்குவதற்கான எமது நோக்கமும் இழக்கப்படுகின்றது.

(viii) 2021 ஆம் ஆண்டில் 10,000 ஆட்சேர்ப்புக்கள் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் உண்மையில் 8043 ஆட்சேர்ப்புகள் மட்டுமே செய்யப்பட்டன. 2021 ஆம் ஆண்டின் செயல் திட்டத்தின் பிரகாரம் ரூ.100,000/= புலமைப் பரிசிலின் கீழ் தொழிற்பயிற்சி வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அதற்கிணங்க, ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு பயிற்சி நிலையத்திலிருந்து முறையான முறையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 30 பயிற்சியாளர்கள் தேசிய இளைஞர் படையணியினால் தொழில்முறை பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். அதற்காக, பயிற்சி நிலையங்கள் மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் தொழிற்பயிற்சி முறைக்குத் தேவையான அளவுகோல்களை உள்ளடக்கிய அறிவுறுத்தல் பத்திரத்தை இங்கே (இணைப்பு 02) சமர்ப்பிக்கின்றேன்.

இந்த உதவித்தொகையைப் பெற்றுக்கொள்ள தகுதிபெறாத பயிற்சியாளர்கள் அரசாங்கத்தினால் நடாத்தப்படும் இலவச தொழிற்கல்வி பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது. தேசிய இளைஞர் படையணியின் அடிப்படைப் பாடநெறியை நிறைவு செய்த பின்னர் தொழில் பயிற்சிக்குப் போகாமல் இருப்பதற்கான காரணங்களாக, உயர் கல்விக்குச் செல்லல், வேலைக்குச் செல்லல், சுயதொழில் அல்லது வணிக நடவடிக்கைகளுக்குச் செல்லல் அல்லது வெளிநாடு செல்லல் போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.
கோவிட்-19 தொற்றுநோயின் தாக்கம் தொழிற் பயிற்சிக்காக எதிர்பார்த்த எண்ணிக்கையிலான மாணவர்களை ஆட்சேர்க்க முடியாமல் போனதற்கான பிரதான காரணமாகும். மேலும், அரசாங்க பரீட்சைகள் உரிய நேரத்தில் நடைபெறாமை, (க.பொ.த உயர் தரம் மற்றும் சாதாரண தரம்), நடமாட்டக் கட்டுப்பாடு, போக்குவரத்துச் சிக்கல்கள் மற்றும் எதிர்பார்த்த காலங்களில் தொழிற்பயிற்சி நிலையங்களில் பாடநெறிகள் ஆரம்பிக்கப்படாமை போன்ற காரணிகளால் எதிர்பார்த்தபடி இலக்குகளை அடைந்துகொள்ள முடியவில்லை.

(ix) தேசிய இளைஞர் படையணியின் ஒரு பயிற்சி நிலையத்தில் இருந்து 30 பயிற்சியாளர்களுக்கு ஒரு முறையான முறையைப் பயன்படுத்தி, பணம் செலுத்தப்பட்டு தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாணவருக்கு அதிகபட்சமாக ரூ.100,000/- என்ற அடிப்படையில் உதவித்தொகை வழங்கப்பட்டது. தலைவர் மற்றும் பேரவையின் அனுமதியுடன் மாணவர்களுக்கு பாடநெறிகளை தெரிவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. பாடநெறிக் கட்டணம் 100,000/- அல்லது அதற்கு மேல் இருக்குமிடத்து தேசிய இளைஞர் படையணியினால் அதிகபட்சமாக 100,000/- செலுத்தப்படும். அதற்கும் குறைவாக இருக்குமிடத்து முழுத் தொகையும் செலுத்தப்படும்.

பாடநெறிகளுக்கு மாணவர்களுக்கு கொடுப்பனவு செலுத்தும் போது பாடநெறி நிறைவடையும் வரையில் பின்னூட்டல் செய்வதற்கும் எதிர்காலத்தில் வேலை வாய்ப்புகளுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகளுக்கான தகவல்களைச் சேகரிப்பதற்கான பின்னூட்டல் தகவல் பத்திரம் தற்போது தயாரிக்கப்படுகின்றது. ஏற்புடைய படிவம் (இணைப்பு 03) ஆக சமர்பிக்கின்றேன். நீங்கள் குறிப்பிட்டுள்ள பிரச்சனைகளுக்கு நாம் விசேட கவனம் செலுத்தி மீண்டும் அதே பிரச்சனைகள் எழாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவு செய்து தெரிவித்துக்கொள்கிறோம்.

(x) 2021 ஆம் ஆண்டில் கோவிட் 19 தொற்றுநோய் வேகமாகப் பரவிய காலத்தில், இந்தக் காலகட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகளைத் தொடர முடியாமல் போனதுடன், மத்திய அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட சுகாதார கட்டுப்பாடுகள் காரணமாக பயிற்சி நிலையங்களைத் தற்காலிகமாக மூட வேண்டியதாயிற்று. இந்த ஆண்டில் நாட்டில் நிலவும் சவாலைக் கருத்தில் கொண்டு, தேசிய இளைஞர் படையணியினால் முதன்முறையாக இணைய வழிமுறை மூலம் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பிக்கப்பட்ட இந்த இணைய வழிமுறையை மேலும் வெற்றியடையச் செய்யும் நோக்கில், பயிற்சி பெறுவோர் / பயனாளிகளுக்கு இலவச சிம் அட்டைகள் மற்றும் இலவச டேட்டா (online data) வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் மூலம் பாடநெறிகளைத் தொடரவும், குறிப்பிட்ட காலத்திற்குள் வெற்றிகரமாகப் பாடநெறிகளை நிறைவு செய்யவும் சந்தர்ப்பம் கிடைத்தது.

உள்ளூர் தொலைபேசி வலையமைப்புக்களில் (signal) காணப்பட்ட சிரமங்கள் மற்றும் இணைய வழிமுறையின் மூலம் பாடநெறியை மேற்கொள்வதில் உள்ள பொருளாதார சிக்கல்கள் காரணமாக கணிசமான எண்ணிக்கையிலான பயிற்சியாளர்கள் பாடநெறிகளை கைவிட்டதாக தெரிவிக்கப்பட்டது. மேலும், அந்த காலகட்டத்தில் நாட்டில் ஏற்பட்ட கோவிட்-19 சூழ்நிலை காரணமாக நடமாட்டக் கட்டுப்பாடு மற்றும் சுகாதார விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்குதல் போன்ற காரணங்களால், பயிற்சி நடவடிக்கைகளை திட்டமிட்டபடி மேற்கொள்ள முடியவில்லை. எனினும் கொரோனா தொற்றுநோயை எதிர்கொண்ட போதிலும்

பாடநெறிகள் இணைய வழிமுறை மூலம் நடத்தப்பட்டன. எனவே அதன் மூலம் பாடநெறிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்ய சந்தர்ப்பம் கிடைத்தமையால் நோக்கங்கள் ஓரளவு அடையப்பட்டுள்ளன என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

(xi) தேசிய இளைஞர் படையணி மூலம் 2022 ஆம் ஆண்டு முதல் மொழிப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. அதற்கிணங்க, சீன, ஜப்பானிய மற்றும் கொரிய மொழி கற்பித்தல் நடவடிக்கைகள் பின்வருமாறு மேற்கொள்ளப்படுகின்றன.

மொழிப் பாடநெறி	மாகாணம்	மாவட்டம்	பயிற்சி நிலையம்	பங்கேற்கும் மாணவர்களின் எண்ணிக்கை
ஜப்பானிய மொழி - (JLPT 04/NAT 04)	சப்பிரகமுவ	கேகாலை	கலிகமுவ	36
	மத்திய	கண்டி	கம்பளை	35
	வட மத்திய	அநுராதபுரம்	கலெண்பிந்துனுவெவ	37
	தென்	ஹம்பாந்தோட்டை	வீரகெட்டிய	34
	மேல்	கம்பஹா	திவுலபிட்டிய	42
		கொழும்பு	தலைமையகம்	62
			ராஜகிரிய	86
	இணைய வழியில் நடாத்தப்படும் பாடநெறி (online)			45
பாடநெறியைக் கற்கும் பயிற்சியாளர்களின் எண்ணிக்கை				377
சீன மொழி	மத்திய	கண்டி	செங்கடகல	26
		மாத்தளை	தம்புள்ளை (2022 I குழு)	44
			(2022 II குழு)	72
	வடமேல்	குருநாகல்	மாவத்தகமை	14
	தென்	காலி	காலி	24
	சப்பிரகமுவ	கேகாலை	கேகாலை	25
	ஊவா	பதுளை	பண்டாரவளை	16
	மேல்	கம்பஹா	கட்டுநாயக்க	20
பாடநெறியைக் கற்கும் பயிற்சியாளர்களின் எண்ணிக்கை				241
கொரிய மொழி	வடமேல்	புத்தளம்	வென்னப்புவ	10
பாடநெறியைக் கற்கும் பயிற்சியாளர்களின் எண்ணிக்கை				10
மொத்த எண்ணிக்கை				628

கேர்ணல் தர்ஷன ரத்நாயக்க ஆர்டபிள்யுபி ஆர்எஸ்பி
தவிசாளர்
தேசிய இளைஞர் படையணி



இல 420, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07.
தொலை பேசி : +94 112 688 885 பெக்ஸ் : +94 112 684 784
மின்னஞ்சல் : info@youthcorps.lk
இணையம் : www.youthcorps.lk